# பொருளடக்கம்

1. திரும்பும் அம்புகள் 5

2. ஆயிரம் அரிவாள் கோட்டை 90

# திரும்பும் அம்புகள்

## 1

"எது நடந்தாலும் விதி என்கிறோம்,

ஆனால் அந்த விதியை நாம்தாம் மறைமுகமாய்

எழுதுகிறோம்."

**வே**ணுவின் அந்த மொபெட் வாகனம் ஓடும்போது அநியாயத்துக்கு சப்தம் போட்டது.நூறு எலிகள் அதனுள் புகுந்து கொண்டு ஒன்றுடன் ஒன்று சண்டை போட்டு பிராண்டிக் கொள்கிற மாதிரியெல்லாம் கூட அவனுக்குத் தோன்றியது.

மெக்கானிக்கிடம் விட்டு ஒரு சர்வீஸ் பார்க்கச் சொல்ல லாம்தான். ஆனால் அவன் ஒரு மாதிரி சிரித்துக் கொண்டே "இந்த வண்டியை விட்றுங்க வேணு சார்" என்பான்.

அப்படியே "எனக்குத் தெரிந்து முப்பது வருஷமாக ஒரு மொபெட்டை யாருமே பயன்படுத்தியதில்லை-கின்னசுக்கு எழுதிப்போடலாம்!" என்பான்.

அதை கோபத்தோடு சென்னால் கூடபரவாயில்லை.

ஒரு மாதிரி சிரித்துக் கொண்டே சொல்வான்.

அந்த சிரிப்பு வேணுவைக் கீறும். கிழிக்கும்.

எனவேதான் ஓடும் வரை ஓட்டும் என்று வேணு மெக்கானிக்கிடம் போவதே இல்லை.

சின்னச் சின்ன மைனர் வேலைகளையும் வேணுவே பார்த்து விடுவான்.

இருந்தும் இந்த "கீச்சுவீச்சு" சப்தத்தை மட்டும் எதுவும் செய்ய முடியவில்லை.

போய்த் தொலைகிறது என்று விட்டுவிட்டான்.

இன்னொரு வேடிக்கை.

அவனைத் தவிர யாராலும் அதை ஸ்டார்ட் செய்யவும் முடியாது.

ஒரு முறை சாவியோடு மறந்து நிறுத்தி விட்டுப் போய்விட்டான்.

திரும்பி வந்து வண்டியை கிளப்பியபோது ஒருவர் அதைப் பார்த்து "என்ன சார் வண்டி ஸ்டார்ட் ஆயிடிச்சு போல?" என்று கேட்டு சிரித்தார்.

தொடர்ந்து "ஒருமணி நேரமா உதைச்சுகிட்டிருந்தீங் களே... இப்ப என்ன பண்ணீங்க" -ஒரு உதைல ஸ்டார்ட் ஆயிடிச்சே" -என்றார்.

அப்போதுதான் எந்த பிரகஸ்பதியோ வண்டியைக் கிளப் பிக் கொண்டு போக முயன்றிருக்கிறான் என்பது தெரிந்தது.

அதே சமயம் சிரிப்பாகவும் வந்தது.

"பாவம் அவன்... கால்வலிக்கு இன்று நிச்சயம் டாக்டரைப் போய்ப் பார்ப்பான்" என்று நினைத்துக் கொண்டான். அது என்னவோ தெரியவில்லை... அந்த வாகனத்துக்கும் வேணு என்றால் ஒரு பாசம் இருக்கிற மாதிரிதான் தெரிகிறது. இல்லா விட்டால் சப்தமோ சண்டித்தனமோ... இன்றைக்கும் அறுபது மைல் வேகத்தில் எல்லாம் ஓடுமா.?



வேணுவும் நல்ல உயரம்! வண்டியில் அவன் அமர்ந்து கொண்டு வேலைக்கு போவதை யாராவது பார்த்தால் நிச்சயம் சிரித்து விடுவார்கள்.

ஒரு ரோபோ மனிதன் படுவிறைப்பாக ஓட்டிக் கொண்டு போகிற மாதிரி இருக்கும்,

இன்றைக்கும் அதே காட்சி... அதே கீச்சு வீச்சு சப்தம்!

ஒரு திருப்பத்தில் வண்டியை ஒடித்தபோது எதிரில் ஒரு டிராஃபிக் போலீஸ்காரர் லைசென்சுக்காக வழிமறித்தார்.

நிறைய பேர் அகப்பட்டிருந்தார்கள்.

ஒருவரிடம் கூட ஆர்.சி. புக்கோ, லைசென்ஸோ இல்லை. போலீஸ்காரர் படு உற்சாகமாக இருந்தார்.

"கோர்ட்டுக்கு போனா ஐநூறுக்கு மேல அபராதம் கட்ட ணும். இங்கு ஒரு ஐம்பதை மட்டும் வெட்டிட்டு போய் கிட்டே இரு" என்று கையை நீட்டிக் கொண்டிருந்தார்.

ஆனால் வேணு சப்ஜாடாக லைசென்ஸ், ஆர்.சி.புக் என்று எல்லாவற்றையும் எடுத்துப் போட்டான். அந்த போலீஸ் காரருக்கு மிக ஏமாற்றமாக போய்விட்டது. வண்டியை சுற்றி வந்து ஒரு பார்வை பார்த்துவிட்டு "இதுக்கு சர்வீஸ் எக்ஸ்பயரி ஆகியிருக்கணுமே?" என்று மிரட்டலாக ஒரு பார்வை பார்த் தார்.

"உங்களுக்கு தேவை லைசென்ஸ், ஆர்.சி.புக்., இன்ஸ் யூரன்ஸ் சர்டிபிகேட். எல்லாம் இருக்குல்ல...?"

"அது யாருக்கு வேணும். சர்வீஸ் எக்ஸ்பயரி ஆயிடிச்சு.

ஆர்.டி.ஓ.க்கிட்ட காட்டி என்ஜினை செக் பண்ணலை. எடு பணத்தை" என்றார்.

"முடியாது... இது என் மாமா வெச்சிருந்து, அவர் மகன் வெச்சிருந்து இப்பநான் வெச்சிருக்கேன். அதுக்காக நீங்க பாராட்டணும்."

“புரியாம பேசறியே... அப்புறமா கண்டபடி ஃபைன் போட்ருவேன். ஒரு நூறு ரூவாயை கொடுத்துட்டு போய்கிட்டே இரு...”

“என் மாச சம்பளமே இரண்டாயிரம்தான் சார். நூறு ரூவால்லாம் தரமுடியாது.”

இருவரிடமும் வாக்குவாதம் வலுக்கத் தொடங்கி விட்டது. மற்ற பார்ட்டிகள் தலையில் அடித்துக் கொண்டு நமுட்டு சிரிப்பு சிரித்தார்கள்.

“சார்..! வீரப்பனைப் போய் பிடியுங்க சார். நான்லாம் அப்பாவி. என் உசுரை ஏன் சார் வாங்கறீங்க...?” -வேணுவிடமும் வார்த்தை தடித்தது.

“என்னடா... நக்ஸலைட் மாதிரி நக்கலா பேசறே.நீ நூறு ரூவா இல்ல ஆயிரம் ரூவா தந்தாலும் உன்னை விட மாட்டேன். ஓரமா போய் அப்படியே நில்லு...” என்று ஒரு மோட்டார் பைக்காரனை நோக்கிப் பாயத் தொடங்கி விட்டார் அவர். ஒரு ஐம்பது ரூபாய் வசூலுடன் திரும்பி வந்தார். வேணுவும் பார்த்தான். “சரி... இந்தாங்க சாவி. முடிஞ்சா இங்க இருந்து எடுத்துகிட்டு போங்க. நான் நடந்து வேலைக்கு போறேன். போய் என் முதலாளி கிட்டையே சொல்றேன். மிச்சத்தை அவர் பார்த்துப் பார்” -என்று ஒரு மாதிரி சொல்லிக் கொண்டு நடக்க ஆரம்பித்தான்.

“ஏய்ஏய் நில்லு...யார் உன்முதலாளி -பெருசாபூச்சி காட்றே... நான் சி.எம்.மே பேசுனாலும் அசரமாட்டேன் தெரியுமா?” -என்றார் அந்த போலீஸ்காரரும். வேணு நின்று ஒரு மாதிரி அவரை வெறித்தான்.

“என்ன வெறிக்கிறே... யாரு உன் முதலாளி? பெரிய டுபாக்கூரா அந்த ஆளு... சொல்லு.”

“அரிமா பொன்னம்பலம்!”



அவன் சொன்ன மறுநொடி அவர் முகத்தில் ஆசிட் பட்ட மாதிரி ஒரு எரிச்சல்.

“யா... யாரு... நம்ம பொன்னம்பலம் சாரா?”-என்று வார்த்தைகளை அல்வாவாய் இழுத்த அந்த போலீஸ்காரர் சாவியை அவன் கையை தேடிப்பிடித்து அமுக்கினார். அப்படியே “சாரோட டயர் கம்பெனியிலையா வேலை பாக்கறே?” என்று மிக நைச்சியமாக கேட்டார். அந்த துள்ளல்... அலட்டல் எல்லாம் பூனையைப் பார்த்த சுண் டெலி கணக்காய் ஓடி ஒளிந்து கொண்டுவிட்டிருந்தது!

வேணு ஒரு மாதிரி சிரித்தான்.

“சரி சரி கிளம்பு... சார்கிட்ட வேலை பாத்துகிட்டு இப்படியா டப்பாவை உருட்டிகிட்டு போவே...” -என்று ஒரு மாதிரி வருத்தப்பட்டார்.

“சி.எம்.மே சொன்னாலும் அசரமாட்டேன்னீங்க... எங்க முதலாளி அவரைவிடவா பெரியவர்?”

“தம்பி... வாயைப் பிடுங்காதப்பா. உனக்கு புண்ணியமா போகட்டும். கிளம்பு முதல்ல...” -பிடித்து தள்ளி விட்டார்.

அவனிடம் மீண்டும் சிரிப்பு

“அரிமா மாளிகை” என்கிற பெயர்ப் பலகையை கடந்து இருபுறமும் நெட்டிலிங்க மரம் சூழ்ந்த மண்பாதையில் விரைந்தது வேணுவின் மொபெட்!

எதிரில் செங்கற்களின் உதவியே துளியும் இல்லாதபடி கட்டப்பட்டதுபோல ஒரு கருங்கல் மாளிகை.

அந்த நாளில் அரசர்கள் கட்டிக்கொண்ட அரண்மனை போலவே இருந்தது.

முகப்பில் ஒரு பெரிய வட்டவடிவ தண்ணீர்தொட்டி. அதில் நீர் தாழைகள் மலிந்து கிடந்தன. நடுவில் அரை

நிர்வாணத்தில் பெண்ணொருத்தி பானையுடன் சிலையாக நின்று கொண்டிருந்தாள்.

அந்த இடத்தை நெருங்கவும் வண்டியின் ஓட்டத்தை நிறுத்திக் கொண்டு மொபெட்டை தள்ள ஆரம்பித்தான் வேணு.

மிக அமைதியாக இருந்தது சூழ்நிலை.

சுற்றிலும் எல்லாவிதமான மரங்களும் வளர்க்கப்பட்டு எல்லா ஜாதி பறவைகளும் குடியேறியிருந்தன. அதிலும் பருத்த மகிழ மரத்தில் மட்டுமே நூற்றுக்கணக்கான பறவைகள் இருந்தன.

தரையெங்கும் உதிர்ந்து கிடக்கும் மகிழம் பூக்கள்.

அதன் காரணமாக கும்மென்று ஒருவித வாசம்!

அந்த வாசனையை வேணு மிகவும் விரும்புவான்.

இழுத்து மூச்சுவிட்டு அந்த இலவச இன்பத்தை அனுபவித்தபடியே மரத்தினடியில் ஒரு ஓரமாக மொபெட்டை ஸ்டாண்டு போட்டு நிறுத்தினான்.

மொபெட்டும் ஒரு மாதிரி சாய்ந்து கொண்டுதான் நிற்கும். ஸ்டாண்டின் ஒரு பக்கத்தில் சில அங்குலம் வரை துருவேறி உதிர்ந்துவிட்டது. அதை அட்ஜஸ் செய்ய ஒரு கல்லை முட்டுக் கொடுப்பான். அதற்காகவே பல கற்களை பொறுக்கி வந்து அருகில் வளர்ந்திருந்த செம்பருத்திப்பூ செடியின் அடிக் குழியில் போட்டு வைத்திருந்தான். அதில் ஒரு கல்லை எடுத்து முட்டுக் கொடுத்து நிறுத்திவிட்டு திரும்பி நடந்தான்.

மாளிகை முகப்பில் அந்தக் காலத்திய வாக்ஸ் ஹால் கார் ஒன்று நல்லகருப்புநிறத்தில் நின்று கொண்டிருந்தது.

அது இருந்தால் அரிமா பொன்னம்பலம் மாளிகையில் இருக்கிறார் என்று அர்த்தம். டிரைவர் வெள்ளைக்கண்ணு சதா காரை துடைத்துக் கொண்டே இருப்பான். இப்பொழுதும் துடைத்துக் கொண்டுதானிருந்தான்.



பொன்னம்பலத்துக்கு எல்லாமே துப்புரவாக பளிச்சென்று இருக்கவேண்டும்,

ஆள் பார்ப்பதற்கு கொஞ்சம் கபில்தேவ் மாதிரி இருப்பார். கிரிக்கெட்டிலும் நிறைய ஆர்வம் உண்டு. அவர் விளையாட வென்றே மாளிகைக்கு தென்பக்கத்தில் நல்ல செவ்வகத்தில் துளியும் மேடுபள்ளம் இல்லாதபடி ஒரு கிரவுண்ட்.

அதில் நடுவில் பக்காவாய் தயாரிக்கப்பட்ட பேட்டிங் பிட்ச். பிட்ச்சிலும் ஸ்டம்புகள் நடப்பட்டு தயாராக இருந்தன.

வேணு பொன்னம்பலம் மாளிகையில் வேலைக்கு சேர்ந்து ஒரு வருடம்தான் ஆகிறது. எலெக்ட்ரீஷியன் ஆக இருக்கிறான்.

யாராக இருந்தாலும் மாளிகைக்குள் இருக்கும்போது யூனிஃபார்ம் போட்டுக் கொள்ளவேண்டும். சிமெண்ட்க் கலரில் பேண்ட்டும் சர்ட்டும்தான் யூனிஃபார்ம்.

அதை பாதுகாப்பாய் வைத்துக் கொள்ள பீரோ லாக்கர்கள் கூட தரப்பட்டிருந்தன.

உள்ளே மட்டும் 24 பேர் வேலை பார்க்கிறார்கள். இவர்களெல்லாம் பொன்னம்பலம் கிரிக்கெட் விளையாட விரும்பும் போது ஞாபகமாய் கிரவுண்டுக்கு வந்துவிட வேண்டும்.

வந்து அவர் சொல்லும் இடத்தில் நின்று விளையாட வேண்டும். நன்றாக விளையாடினால் இனாமெல்லாம் தருவார். அப்போது அவரது ஆறு பெண்களும் மாளிகையின் மாடியில் இருந்து பார்த்தபடி இருப்பார்கள். தப்பித் தவறிகூட கிரவுண்டுப் பக்கம் வரமாட்டார்கள். அப்படி ஒரு வளர்ப்பு! மாளிகைக்குள்ளும் யாருடனும் பேசமாட்டார்கள். யாரும் அவர்களுடன் அநாவசியமாக பேசவும் கூடாது.

மூத்தவள் வளர்மதி, அடுத்தவள் வண்ணமதி, மூன்றாமவள் இந்துமதி, நான்காமவள் காந்திமதி, ஐந்தாமவள் வான்மதி, ஆறாமவள் சாருமதி! ஒருவருக்குகூட கல்யாணமாகவில்லை- இவர்களைக் கடந்து ஏழாவதாக பொன்னம்பலத்துக்கு ஒரு மகன் இருக்கிறான். மார்த்தாண்டன் என்கிற வீரமான பேர் அவனுக்கு... ஆனால் அவனுக்கும் வீரத்துக்கும் சம்பந்தமே கிடையாது. ஒரு பல்லியைப் பார்த்தால் கூட பயப்படுவான். ஒருமுறை நல்ல மழை பெய்தபோது பெரிதாக இடி இடித்தது. மார்த்தாண்டனுக்கு பயத்தில் காய்ச்சலே வந்துவிட்டது. அப்படி ஒரு வீர லட்சணம் அவனுக்கு...

மொத்தத்தில் பொன்னம்பலம் குடும்பத்தை நினைத்தால் அங்கே வேலை பார்ப்பவர்களுக்கெல்லாம் குப்பென்று வியர்த்துவிடும்.

அவரையும் நல்லவரா கெட்டவரா என்று இனம் பிரித்து பார்க்க முடியவில்லை.

திடீர் என்று தட்டிக்கொடுத்து தன் கை மோதிரத்தைக் கழட்டி எல்லாம் போட்டுவிடுவார். அப்படியே மறுநாள் மாறி கிரவுண்டைச் சுற்றி ஓடவிட்டுவிடுவார்.

அதிலும் அமாவாசை பௌர்ணமிகளில் கேட்கவே வேண்டாம். இன்றைக்கு கூட பௌர்ணமி.

வேணு யூனிஃபார்ம் மாட்டிக் கொண்டு வேலை நேரத்துக்கு பத்து நிமிடம் முன்னதாகவே தனது ஆயுதங்களான டெஸ்டிங் லைட், ஸ்க்ரூ டிரைவருடன் மாளிகைக்குள் நுழைந்துவிட்டான்.

அப்போது எதிரில் மூத்தவள் வளர்மதி நல்ல அரக்கு நிற பட்டுத் தாவணி சட்டையில் அவன் எதிரில் தோன்றி "ஏய்... என் ரூம்ல ஏ.சி. சரியா வேலை செய்யல... என்னன்னு வந்து பாரு."-என்றாள். அடுத்த நொடியே அவளது அறைக்குள்



நுழைந்து ஏ.சி.பாக்ஸ் அருகே போய் நோட்டம் போடத் தொடங்கினான் வேணுவும்.

திடீரென்று வீல் என்று ஒரு அலறல் சப்தம் கேட்டது. கொஞ்சம் போல குலை நடுங்கியது. யார், எதற்கு கத்துகிறார்கள் என்கிற கேள்விகளுக்கெல்லாம் இடமே கொடுக்காமல் ஏ.சி.பாக்ஸை அப்படியே வெளியே எடுக்க ஆரம்பித்தான். கனமான அந்தப் பாகம் பாதி வந்து மீதி வராமல் படுத்தியது. இன்னொருவர் துணை கட்டாயம் தேவை என்று புரிந்தது.

பெரியசாமி என்னும் அட்டெண்டர் வேலைக்கு வந் திருப்பான். அவனைப் போய் அழைத்து வருவதற்காக அப் படியே பெட்டியை பாதியில் நிறுத்திவிட்டு கிளம்பினான்.

"எங்க போறே?"-வளர்மதி தடுத்து கேட்டாள்.

"பாக்ஸை இழுக்க இன்னும் ஒரு ஆள் வேணும்மா. நான் போய் நம்ம பெரியசாமியை கூட்டிகிட்டு வந்துட்றேன்."

"ஒண்ணும் வேண்டாம். நான் பிடிக்கறேன் வா..." -அவள் தயாரானாள். அவனுக்குள் உதைத்தது.

"அம்மா... உங்களால் முடியாது. அய்யா பார்த்தா ஆபத்து."

"அப்பா பிசியா அவர் ரூம்ல இருக்காரு. அதெல்லாம் பார்க்க மாட்டாரு. நீ வா..."

"இல்லம்மா... பெரியசாமியை போய் ஒரு நிமிஷத்துல கூட்டிகிட்டு வந்துட்றேன்."

"இப்ப நீ என் பேச்சை கேட்கமாட்டே?"

-அவள் சற்று மிரட்டலாக பேசவும் வேறு வழியின்றி அவள் உதவியோடு அந்த பாக்ஸை வெளியே இழுக்க முயன்றான். வளர்மதியும் நல்ல தீவிரம் காட்டினாள். குனிந்து இழுக்க முனைந்தபோது தாவணி நழுவி முன் மார்பு பால் கோவாவை கிளறிக் கொட்டியமாதிரி வழிந்து பெருகியது.

பார்க்கவும் முடியவில்லை; பார்க்காமல் இருக்கவும் வேணு வால் முடியவில்லை.

மிரண்டான்.

நிமிர்ந்தான்.

நெற்றி வியர்வையை வழித்துப் போட்டவன்-

"வேண்டாம்மா... போயிடுங்க. நான் பாத்துக்கறேன் என்றான்.

"வேணு..." -வளர்மதி ஒரு தினுசாக அவனை அழைத் தாள். தாவணியிடம் திரும்பவும் நழுவல். அவனுக்கும் புரிந்துவிட்டது.

முப்பத்தைந்து வயதாக ஒரு பெண்ணுக்கு திருமணமே ஆகாமல் இருந்தால் இப்படித்தான்...

"அம்மா வேண்டாம்மா... யாராவது பார்த்தா என் வேலை போயிடும்மா..."

-அவன் சொல்லச் சொல்ல அவள் போய் கதவை தாழிடத் தொடங்கினாள்.

அதே சமயம் அவனுக்கு எப்போதோ பொன்னம்பலம் குடும்பம் பற்றி கேள்விப்பட்ட ஒரு விஷயம் ஞாபகத்து வந்தது.

அவர் குடும்பத்தில் யாருக்கு திருமணமானாலும் அவர்கள் அதிகபட்சம் மூன்று மாதத்தில் விதவையாகி விடுவார்கள்! இதனால் எவ்வளவோ கோடிகள் இருந்தும் யாரும் அவர் களைத் திருமணம் மட்டும் செய்துகொள்ள முன் வரவே யில்லை.

'இப்பொழுது இவளிடம் தான் தன்னை இழந்தால்...?' வேணுவுக்கு வியர்த்தது.



அவளோ அவன்மேல் மரம்போல விழுந்து கட்டி அணைத் துக் கொண்டாள். ஒரு அணை நீர்வரத்து தாங்காமல் உடைத்துக் கொண்டதுபோல இருந்தது.

கடவுளே!

## 2

"எல்லாம் இறைவன் செயல் என்பதன் பொருள் வேறு. அதற்காக நமக்கான ஒவ்வொரு விநாடியும் அவனால் தீர்மானிக்கப்பட்டதாக நினைப்பதும் தவறு! நமது நாளையும்,பொழுதையும் அதன் இன்ப துன் பங்களையும் நமது செயல்கள் என்னும் கருமங்களால் நாம் தாம் தீர்மானிக்கிறோம்!"

வளர்மதியின் கண்களில் விரகதாபம் பொங்கி வழிந்து கொண்டிருந்தது.

வேணுவோ அவர்கள் குடும்ப சாபத்தை உத்தேசித்தும் காதில் விழுந்தும், ஊர் முழுக்க பரவியிருக்கும் அந்த சாபத் தால் உண்டான பயத்தோடும் நடுக்கமாக அவளைப் பார்த் தான்.

"வேணு... என் துடிப்பு உனக்குப் புரியலையா?"

அவள் குரலில் தாப ஸ்மரணை.

"புரியாம போக நான் என்ன உணர்ச்சி இல்லாதவனா...? இருந்தாலும் நான் சாதாரண எலெக்ட்ரீஷியனுங்க ."

"அதைப் பத்தி நான்தான் கவலைப்படணும். நீ ஏன் கவலைப்படறே?"

"என்னம்மா நீங்க... விடுங்கம்மா. உங்களை எல்லாம் உத்துப் பார்த்தாலே ஐயா கண்ணை நோண்டிடுவாரு. இதுல

நீங்க இப்படி என்கிட்ட இருக்கறதப் பார்த்தா அவ்வளவு தான்...”

“இங்க இருந்தாதானே சிக்கல்... நாம் ஓடிப்போய்டலாமா?”

வளர்மதி பெரிதாக ஒரு குண்டைத் தூக்கிப் போட்டாள்.

“என்ன யோசிக்கறே... இந்த ஜென்மத்துல இங்க இருக்கற வரை எங்களுக்கு கல்யாணம் நடக்கப் போறதில்ல. என்னாலயும் ஒரு மரக்கட்டையா வாழ முடியலை. உன்னை எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு வேணு...”

“அதுசரி... உங்க வயசை கொஞ்சம் யோசிச்சுப் பாருங்கம்மா. இனி இப்படி பேசாதீங்க. இதோட நீங்களும் மறந்துடுங்க. நானும் மறந்துட்டேன். என்னை மன்னிச்சிடுங்கம்மா... நான் வர்றேன்.”

வேணு அந்த ஏசி பெட்டியை திரும்பத் தூக்கி வைக்கக் கூடத் தோன்றாமல் விட்டால் போதும் என்று விலகி ஓட ஆரம்பித்தான்!

அவள் கண்களில் கண்ணீரின் பிரவாகம்!

அந்த பங்களாவுக்குள் ஒரு அறையை ஆபீஸ் ரூமாக ஆக்கிக் கொடுத்திருந்தார் பெரியவர் பொன்னம்பலம். அங்கேதான் மேனேஜர் நாகசாமி எப்பொழுதும் இருப்பார். அவர் டேபிளில்தான் அட்டென்டென்ஸ் ரிஜிஸ்தாரில் இருந்து லாக் நோட்டு வரை எல்லாம் இருக்கும்.

வேலை முடிந்து போவதற்கு முன் அதில் அன்றைய தினம் செய்த வேலைகளை எழுதி கையெழுத்துப் போட்டுவிட்டு போக வேண்டும் என்பது வழக்கம்.

வேணுவும் மேனேஜர் அறைக்குள் நுழைந்தான்.

நாகசாமி அவனைப் பார்த்துவிட்டு கடிகாரத்தைப் பார்த்தார்.



மணி ஒன்பதரை ஆகியிருந்தது.

“அரைமணி லேட்டா...? -கேட்டார்.

“இல்லைய்யா...ஆமாய்யா...” -அவனிடம் ஒரு மாற்றம்.

“ஒரு கேள்விக்கு இரண்டு பதிலா?”

“அய்யா... வந்து... வர்ற வழியில போலீஸ்காரர் ஒருத்தர் பிடிச்சுகிட்டாருங்க. அதான்...”

“உன்னை எதுக்கு போலீஸ் பிடிக்குது...என்ன தப்பு பண்ணே?”

“என்னைப் பிடிக்கலீங்க... என் வண்டியைப் பிடிச்சு லைசென்சு, ஆர்.சி.புக்கெல்லாம் கேட்டாருங்க.”

“அதுக்கு அரை மணி நேரமா...? அரிமா மாளிகைல வேலை பார்க்கறேன்னா விட்டுட்டு போறான்.”

“அப்படி சொல்லித்தாங்க வந்தேன்...”

“சரி சரி போய் வேலையைப் பாரு... இனிமேட்டு இப்படி நொண்டிச் சமாதானமெல்லாம் சொல்லாதே...”

நாகசாமி குரலில் கொஞ்சம் கடுமை.

“சரிங்கய்யா... அய்யா ஒரு சின்ன விண்ணப்பம்.”

“என்ன...?”

“காலைல இருந்தே வயிறு சரியில்லலீங்க. ஒரே வலியா இருக்குது.”

“அதனால...?”

“இன்னிக்கு ஒரு நாளைக்கு லீவு வேணுங்க...”

“லீவா... சரிதான் -இன்னிக்குதான் இங்க தலைக்கு மேல வேலை! தோட்டத்து கிணத்துல மோட்டார் பம்ப்செட்டுல பிராப்ளமாம், மாடியில ட்யூப்லைட் அணைஞ்சு அணைஞ்சு எரியுதாம். அதெல்லாம் யார் பார்க்க?”

“அய்யா...”

"என்ன அய்யாகொய்யா... ஜீப்பை எடுத்துகிட்டு நம்ப டாக்டரை பார்த்து ஊசி மருந்து எடுத்துக்க- வந்து வேலையைப் பாரு. பெரியவர் வேற இன்னிக்கு காலைல இருந்தே மூட்ல இல்ல. போ... போ..."

நாகசாமி படு ஸ்ட்ரிக்டாக பேசி அவனை விரட்டினார். அவனுக்குள் அமிலம் சுரக்காத குறை!

அரைமனதாக அறையை விட்டு வெளியில் வந்தான். இரண்டாமவள் வண்ணமதியும், இந்துமதியும் ரிங்பாலுடன் சிரித்தபடி அவனைக் கடந்து கொண்டிருந்தனர். நல்ல வேளை... வளர்மதி திரும்பவும் கண்ணில் படவில்லை. ஆனால் அவள் அவனை கட்டிப்பிடித்ததும் ஓடிப் போய் விடலாமா என்று கேட்டதும் மட்டும் நாடக ஒத்திகைபோல திரும்பத் திரும்ப அவனுக்குள் அரங்கேறியபடியே இருந்தது.

அப்படியே ஞானவேல் என்பவனின் ஞாபகமும் வந்தது. பாவம் ஞானவேல்... இப்போது வேலையில் இல்லை. எங்கிருக்கிறான் என்றும் தெரியவில்லை.

ஏழெட்டு வருஷமாக அரிமா மாளிகையிலேயே பழியாகக் கிடந்தவன். வளர்மதி அவனை ஒருநாள் செஸ் விளையாடக் கூப்பிட்டாள். அவன் தலை எழுத்து சரி என்று சம்மதித்து அவளிடம் அமர்ந்து விளையாடத் தொடங்கிவிட்டான்.

அதை பெரியவர் பொன்னம்பலமும் பார்த்துவிட்டார். அவ்வளவுதான்... அவன் கதை முடிந்துபோனது. செஸ் விளையாடியதற்கே ஆள் காணாமல் போனால் செக்ஸ் விளையாட்டிற்கு உயிரே அல்லவா போகும்? அவனுக்கு நடுங்கியது.

அட்டெண்டர் பெரியசாமி வேறு எதிரில் வந்தபடி இருந்தான்.

"என்ன வேணு... ஏன் ஒரு மாதிரி இருக்கே?"

"ஒண்ணுமில்லப்பா... உடம்பு சரியில்ல. அதான்!"



"பெரிய பொண்ணு ரூமுக்குள்ள போன மாதிரி தெரிஞ்சிச்சே?"

"அ... அது... ஏசி மெஷின் அங்க ரிப்பேராம். அதான் பாக்கப் போனேன்."

"பாத்து... அது அப்புறம் உன் பொழப்ப ரிப்பேராக்கிடப் போவுது. அப்புறம் ஞானவேல் கதிதான்."

"எ...என்னப்பா மிரட்டறே? ஞா... ஞானவேல் இப்ப எங்க இருக்கான்னு தெரியுமா?"

"யாருக்கு தெரியும்...மும்பை பக்கம் ஓடிப்போய்ட்டான்னு சிலர் சொல்றாங்க. அதெல்லாம் இல்ல தண்டவாளத்துல தலையைக் கொடுத்து செத்துட்டான்னு சொல்றவங்களும் இருக்காங்க..."

"ஆனாலும் அநியாயமா இருக்குதே பெரியசாமி..."

"சத்தம் போடாதே... போய் வேலையைப் பாரு, தப்பித் தவறி கூட பெரியவர் பொண்ணுங்ககிட்ட மாட்டிக்கிடாதே. அவ்வளவுதான்"

பெரியசாமி வேறு நல்ல அணுகுண்டாகப்பார்த்து மனதில் புதைத்துவிட்டு நகர்ந்தான். வேணுவுக்கு உதறியது.

"இது அரிமா மாளிகையா... மர்ம மாளிகையா?"

**தோ**ட்டத்து கிணற்றில் ஏக ஆழத்தில் இருந்தது தண்ணீர். மோட்டார் போட்டு ஒருமணி நேரம் ஓடினால் போதும் தரை தெரியும்.

தோட்டக்காரன் அந்தோணி கிணற்றுத்திட்டின்மேல் உட்கார்ந்து கொண்டு பீடி பிடித்துக் கொண்டிருந்தான். வேணு வரவும் பீடியை காலடியில் போட்டு மிதித்து விட்டு நல்ல பிள்ளையாட்டம் பார்த்தான்.

"எதுக்கு அதை கீழே போட்டே... வேஸ்ட் பண்ணிட்டியே?"

"மேனேஜரோன்னு நினைச்சுகிட்டேன்... அதான்..."

"அவ்வளவு பயமாக்கும்?"

"இல்லியா பின்னே...? வேல நேரத்துல தம் அடிச்சேன்னு சொல்லி என் பொழப்புலில்ல அடிப்பான் அந்த ஆள்."

"சரி...மோட்டார் ஓடலையாக்கும்?"

"ஆமா... ஏர் லாக் ஆயிடிச்சாட்டம் இருக்கு."

"அப்ப பிளம்பரைல்ல கூப்பிடணும். நான் எதுக்கு?"

"பிளம்பர் சீனுப்பய இரண்டு நாளா லீவு...உனக்கு தெரியாதா?"

"அப்படியா சேதி... நான் லீவு கேட்டப்போ இல்லேன்னு சொன்ன மேனேஜர் பிளம்பருக்கு மட்டும் எப்படிகொடுத் தார்னு தெரியலியே..."

"அட நீ ஒண்ணு ... அவன் இனிமே வேலைக்கு வந்தா தான் வருவான். என்னைக் கேட்டா இந்த வேலையே வேண் டாம்னு ஓடிட்டான்னுதான் சொல்வேன்..."

"என்ன அந்தோணி சொல்றே நீ...?"

"என்னத்த சொல்ல... இரண்டு நாளா நெஞ்சுக் குழியி லையே இருக்கு அந்த விஷயம். சொல்லவும் தைரியம் இல்ல, சொல்லாம இருக்கவும் முடியில."

"சும்மா சொல்லு... நான் யார்கிட்டேயும் சொல்ல மாட் டேன்."

"மாதா மேல சத்தியமா?"

"அட சொல்லப்பா... பெரிய சிதம்பர ரகசியத்தை சொல் லப் போறவனாட்டம் சத்தியமல்லாம் கேக்கறே...?"

"எனக்கு சிதம்பர ரகசியமெல்லாம் தெரியாது வேணு. ஆனா இது அதுக்கும் மேல. அதுமட்டும் தெரியும் ."

"என்ன... என்ன... சொல்லு?"



"சொல்லுன்னா... சத்தியம் பண்ணு சொல்றேன்."

அந்தோணியின் பூர்வாங்க பீடிகையே பலமாக இருந்தது. வேணுவுக்குள்ளேயும் குறுகுறுத்தது. தனக்கும் வளர்மதிக்கும் ஆன விஷயம்போல பலமாக எதுவும் இருக்குமோ என்று கூட தோன்றியது.

சரி என்று சத்தியம் செய்தான். அந்தோணியும் சுற்றிலும் பார்வையை ஓடவிட்டு விட்டு மெல்ல வாயைத் திறக்க ஆரம்பித்தான்.

"நம்ம பெரியவரோட இரண்டாவது பொண்ணு வண்ண மதிக்கும் அவனுக்கும் ஒரு இது..."

அந்தோணி "இது..." என்று முடித்த நொடி அவன் நெஞ் சில் ஒரு குத்து விழுந்த மாதிரி இருந்தது.

"இங்க இதே தோட்டத்துல தான் அவனும் அந்த பொண் ணும் அடிக்கடி சந்திச்சு பேசிக்குவாங்க..."

"நிஜமாவா?"

"கண்ணால பாத்தவன் நான்...கண்டுக்காம அப்படியே ஒதுங்கிட்டேன்."

"சரி...அதுக்கென்ன?"

"அதுக்கென்னவா... அந்த பொண்ணு ஆசைப்பட்டா ஆச்சா. இவன் ஆசைப்படணும்ல?"

"அப்ப இவன் ஆசைப்படலையா?"

"எங்க... அது ஓடிப்போய் கல்யாணம் பண்ணிக்கலாம்னு கூட சொன்னிச்சு. இவன்தான் மாட்டேன்னு சொல்லிட்டான்."

"அடக் கண்றாவியே..."

"கண்றாவியா... புத்திசாலிப்பா அவன். ஓடிப்போய் எங்க ஒளியுவாங்க. பெரியவர் பொளந்து போட்ரு வாருல்ல."

"ஆமாமா"

அதான்... பாத்தான் அந்தப் பய... முதலுக்கே மோசம் வரதுக்கு முந்தி ஓடிடலாம்னு ஓடிட்டான்."

"நான் தெரியாமத்தான் கேக்கறேன். அந்த பொண்ணோ கோடீஸ்வரன் வீட்டு பொண்ணு. போயும் போயும் ஒரு பிளம்பரையா அது லவ் பண்ணனும்?"

"பொடலங்கா. காஞ்ச மாடுங்க பசுங்கொல்லைன்னு பாக்குமா, இல்ல காஞ்ச கொல்லைன்னு பாக்குமா?"

"என்ன சொல்றே அந்தோணி நீ?"

"உனக்கு தெரியாதாக்கும்... பெரியவர் வம்சத்துல யார் கல்யாணமாகி நல்லவிதமா வாழ்ந்துருக்காங்க சொல்லு பார்ப்போம்."

"நீ என்ன சொல்றே...?"

"பெரியவரோட கூடப் பொறந்தவங்க ஆறுபேர். அந்த ஆறுபேரும் கல்யாணம் கட்டி அதிக பட்சம் ஆறு மாசத்துல தாலி அறுத்துடலை...?"

"கேள்விப்பட்டிருக்கேன்... கேள்விப்பட்டிருக்கேன். பெரியவருக்கு ஒரே ஒரு பையன் மாதிரி, அவரும் அவங்கப்பாவுக்கு ஒரே மகன்... குடும்பத்துக்கே ஏதோ சாபம்கற மாதிரி நானும் கேள்விப்பட்டிருக்கேன்."

"அப்புறம்... இந்த சொத்து... செல்வாக்கு... எல்லாம் ஊரை உலைல அடிச்சு போட்டு சம்பாதிச்சதுல்ல..."

"அது மட்டும் எனக்குத் தெரியாது. உனக்கு விவரமா தெரிஞ்சா சொல்லு..."

"இந்த அரிமா மாளிகையும், தோட்டமும், விளையாட்டு மைதானமும் வாஸ்தவத்துல கோவில் சொத்துங்களாம், தெரியுமா உனக்கு...!"

அந்தோணி தான் ஒரு காலப் பலகணி என்கிற மாதிரி விஷயங்களை கக்கிக் கொண்டே போனான்.



"அப்படியா சங்கதி...?"

"இல்லியா பின்னே... அந்த கோவிலுக்கு கூட பெரியவர் அப்பா தனசேகரன்தான் தர்ம கர்த்தாவா இருந்துருக்காரு. அந்த காலத்துலையே கோவில் பூசாரியை காலி பண்ணிட்டு சொத்துக்களை இவர் சுருட்டிகிட்டதா சொல்வாங்க."

"கொலையா?"

"ஆமாம்... இதோ... இந்த கிணத்துலதான் பூசாரி பொணம் மிதந்துச்சு. எங்கப்பா பாத்துருக்காரே."

"கொலைன்னே..."

"கொலைதான்.அடிச்சு கிணத்துல தூக்கிப்போட்டு தற்கொலைன்னு ஊரை நம்ம வெச்சுட்டாரு பெரியவரு."

"சரி... அதுக்கும் அவரோட பொண்ணுங்க வாழாம போனதுக்கும் என்ன சம்பந்தம்?"

"அப்படிக் கேளு... பூசாரியோட சம்சாரம் தாலி அறுத்துச் சில்ல...?"

"ஆமாம்...அது சாபம் விட்டுச்சாக்கும்?"

"அதேதான்... இனி உன் வம்சத்துல யாரும் தாலியோட இருக்கமாட்டாங்க. எல்லாருமே முண்டச்சியாவாங்கன்னு சொல்லிச்சாம்..."

"அதான் நம்ம பெரியவர் தன் பொண்ணுங்களுக்கு கல்யாணம் பண்ணி வைக்காம இருக்காராக்கும்?"

"அவருக்கு ஆசைதான். ஆனா இந்த விஷயம்தான் அவங்க குடும்பத்துல எல்லாருக்கும் தெரியுமே. அதான் யாரும் கிட்ட வரமாட்டேங்கறாங்க..."

"அதுசரி... கல்யாணம் ஆகாம கன்னியாவே இருந்துட்டா ஒரு பிரச்சினையும் இல்லையாமா?"

"ஆமாமாம்... அவங்க கன்னியாவே இருந்தாத்தான் பெரிய வர் நல்லா இருக்க முடியும்- அவருக்கு பொறந்துருக்காரே ஒரு மவன்... அவன் நல்லா இருக்க முடியுமாம். இல்லாட்டி அவங்களும் போய்ச்சேர வேண்டியதுதான்..."

"எப்படி எப்படி...?"

"பெரியவர் அப்பா எப்படி செத்தாரு... தெரியாதா?"

"தெரியாதே... எப்படி?"

"பாம்பு கடிச்சுல்ல செத்துப் போனாரு."

"அடக் கொடுமையே..."

"கொடுமைதான். கோவில் சொத்தை அபகரிச்சிட்டு ஒரு பூசாரியையும் கொன்னு புதைச்சுட்டு நிம்மதியா வாழ்ந்துட முடியுமா? காரும் பணமும் இருந்துட்டா ஆச்சா...?

"அப்ப அதனாலதான் பெரியவர் தன் மகளுங்க யார் கூடையும் பேசக்கூடாதுன்னு கட்டுப்பாடா வளர்க்கறாரா?"

"ஆமாம்... அவங்க கன்னியாவே இருந்து சாகணும். அப்ப தான் இவர் நல்லா இருக்க முடியும். இவர் பையனும் நல்லா இருக்க முடியும். இல்லாட்டி இவங்களுக்கும் அல்ப சாவு தான்..."

அந்தோணி கையை உதறிக் கொண்டே சொன்ன விதத் தில் ஏராள அர்த்தங்கள்.

"இதை எல்லாம் எவ்வளவு தூரத்துக்கு நம்பறதுன்னு தான் தெரியில..." -என்றான் வேணுவும்.

"நம்பித்தான் ஆகணும். ஆறுபேர்ல்ல அநியாயமா தாலி அறுத்துருக்காங்க... பெரியவரும் வேற செத்து வெச்சுருக் காரே..."

"அது சரி... இதெல்லாம் தெரிஞ்சிருந்தும் இந்த பொண் ணுங்க ஏன் கல்யாணத்துக்கு துடிக்குதுங்க?"



"என்ன வேணு நீ... எதை அடக்குனாலும் அந்த ஆசையை அடக்க முடியுமா? அதுலையும் நெய்யும் பருப்புமா சாப்பிடும் போது உடம்பு நெருப்பா தகிக்குமே. ஆசைக்கு வெக்கம் ஏது?"

அந்தோணி கேட்க வேணுவுக்கே ஒரு மாதிரி பரிதாப மாகிப் போனது. அப்போது யாரோ வரும் சப்தம் கேட்டது.

"வேணு...மேனேஜர்தான் வர்றான்னு நினைக்கறேன். ஒடு... மோட்டார்கிட்ட போய் என்னத்தையாவது நோண்டு. நானும் மண்வெட்டியோட போய் எதையாவது வெட்றேன்..."

அந்தோணி பரபரப்பானான். அருகிலேயே ஒரு களைக் கொத்தியும் மண்வெட்டியும் இருந்தது.

எடுத்துக்கொண்டு அடர்வாக வளர்ந்திருந்த வாழைத் தோட்டத்துக்குள் புகுந்து கொண்டான். வேணுவும் வேகவேக மாக மோட்டர் பம்ப்செட் அறைக்குள் நுழைந்து மோட்டாரின் கார்ட் போர்ஷனை கழட்டத் தொடங்கினான்.

மேனேஜர்தான் வந்திருந்தார்.

யூனிஃபார்ம் டிரஸ் அவருக்கு அவ்வளவு பொருத்தமாக இல்லை. சோளக் கொல்லை பொம்மை மாதிரி இருந்தது. பம்ப்செட் அறையை எட்டிப் பார்த்தவர் அங்கே செயல்படத் தொடங்கியிருந்த வேணுவைப் பார்த்து ஒரு மாதிரி தாடை யைத் தடவினார்.

அவர் நிழல் அவன்மேல் விழுந்தும் வேணு திரும்பவே யில்லை. மனசெல்லாம் அந்தோணி சொன்ன விஷயங்களால் படபடப்பில் இருந்தது.

"வேணு..." -மேனேஜர் அவனை அதட்டலாய் அழைத் தார்.

திரும்பினான்.

"டாக்டர்கிட்ட நீ போகலை...?"

இல்லய்யா." -வேணுவின் குரலில் ஈனசுரம்.

"அப்ப என்கிட்ட லீவு போட்றதுக்காக பொய் சொ னேன்னு சொல்லு?"

"அய்யா..." -பதறிப் போனான் வேணு.

"ஆமா... எங்க அந்த அந்தோணி...?"

"இங்கதான்யா இருந்தாரு..."

"இங்கதான்னா... எங்க?"

"வரும்போது பாத்தேங்க... வாழைத் தோட்டத்துல இரு காரோ என்னவோ..."

"சரி... வேலையை முடிச்சிட்டு என்னவந்து பாரு." -அதட்டல் குறையாமல் சொல்லிவிட்டு அங்கிருந்து நகர் தார்.

வேணுவுக்குள் பதட்டம் பெருகியது.

வெளியே அந்தோணியை தேடிக்கொண்டு நடந்தார்.

காற்று வாழை தோட்டத்தில் புகுந்து விளையாடிக் கொண் டிருந்தது. ஒழுங்காக ஒரு இலையை விட்டு வைக்கவில்லை அவ்வளவிலும் கிழிசல்கள். பல வாழைகள் தார் போட்டிருந் தன. மூங்கில்கள் அவை கீழே விழாமல் தாங்கியபடி இருந்தன. அந்தோணியும் ஒரு இடத்தில் எருக்குழி வெட்ட ஆரம்பித்திருந்தான்.

மண்வெட்டி சரச்சரக்கென்று மண் கவளங்களை அள்ளிப் போட்டபடி இருந்தது.

மேனேஜர் வரும் சப்தம் கேட்டும் வேலையில் கவனமாய் இருக்கிற மாதிரி நடித்தான் அந்தோணி.

"எலேய் அந்தோணி..." -கத்திக் கூப்பிட்டார் மேனேஜர் நாகசாமி.

"அய்யா..." -திரும்பினான்.



"என்ன பண்றே?"

"எருக்குழி போட்டுக்கிட்டிருக்கேங்க..."

"அதெல்லாம் ஒண்ணும் வேணாம். நல்ல வாழை இலையா பார்த்து ஒரு நூறு இலை வேணும். அறுத்து எடுத்துகிட்டு சமையக்காரன் கிட்டாமணியைப் போய் பாரு."

"சரிங்கய்யா..."

"எங்கேயும் எதுக்காகவும் குழியைத் தோண்டிகிட்டு இருக்காதே... பெரியவர் உத்தரவு."

மேனேஜர் சொன்ன சூட்டோடு திரும்பி நடந்தார். நடக்கும் போது ஒரு பூவரசமரக் கன்று நடப்பட்ட குழியருகே சென்று ஒரு பார்வை பார்த்தார். அந்தோணியை அது என்னவோ செய்தது. அதன்பிறகு அவர் தலை மறைந்துவிட்டது. அந் தோணி அந்த மரக்கன்று அருகே வந்து குழியைப் பார்த்தான். இடுப்பு உயர மரக்கன்று. ஆரம்பத்தில் பங்களா முகப்பில்தான் நட்டிருந்தார்கள். அதை எதற்காக இப்படி வாழைத் தோட்டத் தில் கொண்டு வந்து நட்டு வைத்தார்கள் என்பது தெரிய வில்லை.

அப்படியே நடுவதாக இருந்தாலும் அந்தோணிதான் அதை செய்திருக்க வேண்டும். ஆனால் அவனோ ஒரு ஞாயிற்றுக் கிழமை லீவில் இருந்த சமயம் யாரோ வந்து நட்டிருக்கிறார் கள்.

மேனேஜரிடம் கேட்டபோது "பெரியவர்தான் நடச் சொன் னார். அது அங்க நல்லா வளரணும். கவனமா பார்த்து தண்ணி விடு" என்று சொல்லி அவன் வாயை அடைத்து விட்டார்.

அப்போது கூட எதார்த்தமாக சொல்வதாகத்தான் நினைத் தான்.

ஆனால் அடிக்கடி தோட்டத்துப் பக்கம் வந்து அநத கன்றைப் பார்ப்பதுதான் சந்தேகத்தை வரவழைத்தது.

என்னவாக இருக்கும்?

சந்தேகத்தோடு கன்றுக் குழியைப் பார்த்தான்.

சற்றுத்தள்ளி ஒரு அழுக்குத் துணி ஒன்று கிடந்தது.

மண்ணோடு மண்ணாக ஒட்டிக் கொண்டு கிடந்த குனிந்து அதை எடுத்துப் பார்த்த போது சுரீர் என்றது. அ அரிமா மாளிகையில் ஊழியர்கள் அணியும் யூனிஃபார்மி சட்டைக் காலர் பகுதி. காலரில் சலவைக் குறி "ஞானவே என்கிற எழுத்தாக தெரிந்தது. "இது ஓடிப்போன ஞானவே சட்டை... இது எப்படி இங்க?"

-அந்தோணிக்குள் பூச்சி பறக்க ஆரம்பித்தது. சுற்று முற்றும் பார்த்தான். அப்போது அவனைப் பார்த்தபடியே வேணு வந்து கொண்டிருந்தான்.

"என்ன அந்தோணி மேனேஜர் தேடி வந்தாரா?"

"ஆமாம் வேணு... இதைப் பார்த்தியா?".

"என்ன இது... நம்ம யூனிஃபார்ம் சட்டைத் துணி மாதி இருக்குது."

"ஞானவேலோட சட்டைப்பா... கிழிஞ்சுபோய் இங் கிடக்குது."

"அதுக்கென்ன...?"

"எனக்கென்னவோ சந்தேகமா இருக்கு. ஒரு நிமிஷ யாரும் வாரங்களான்னு பாத்துகிட்டிரு. நான் என்னன்னு பாக்கறேன்."

-அந்தோணி மளமளவென்று அந்த குழியை தோண்டத் தொடங்கினான்.

"எதுக்கு இப்ப குழியைத் தோண்டறே?"

"காரணமாத்தான்..." -சொல்லியபடி தோண்டிக்கொண்டே போனான்.



சில அடியிலேயே அதிர்ச்சி காத்திருந்தது.

குழியில் ஞானவேலின் சடலம்.

## 3

"ஒலிக்கு ஏற்ற எதிரொலி உண்டு. காரணமில்லாமல் ஒரு காரியமும் நிகழ்வது இல்லை. எது எதன் பொருட்டு என்பதைக் கண்டறியும் சக்தி நமக்கு இருந்தும் நாம் அதை பயன்படுத்துவதே இல்லை.

ஒரு கைதட்டல் ஒலியால் நாளை பெய்யவிருக்கும் மழை ஒரு நொடி முந்திப் பெய்யலாம். இல்லாவிட்டால் பக்கத்தில் இருக்கும் மரத்தில் இருந்து ஒரு இலை உதிரலாம். கண்டறியத் தெரிய வேண்டும்!"

ஞானவேலின் சடலம் அந்தோணிக்குள் கிலியை மூட்டியது. மண்வெட்டியைப் போட்டு விட்டு ஓடிப்போய் தூர நின்று கொண்டான்.

வேணுவும் ஆடிப்போனான். ஏற்கனவே நெஞ்சுக் கூட்டில் படபடப்பு. இப்பொழுது அது பலமடங்கு அதிகரித்திருந்தது.

"அ...அ...அந்தோணி..." நடுங்கியது அவன் குரல்.

"பா... பாவிங்க... கொன்னு புதைச்சுட்டு எங்கோ ஓடிப் போய்ட்டதா கதை கட்டிவிட்டுட்டாங்க..." -என்றான் அந்தோணியும்.

"இப்ப என்ன பண்ணப்போறே...?"

"தெ... தெரியலையே..."

"முதல்ல குழியைப் போட்டு மூடு. அந்த மேனேஜர் திரும்பி வரப்போறான்."

வேணு பதற திரும்பி வந்து குழியை திரும்பவும் வேக வேகமாக மூடினான். பூவரசங்கன்று துவண்டு விட்டிருந்தது. அதை திரும்ப மையத்தில் வைத்து காலால், தோண்டியது தெரியாதபடி மிதித்து சமப்படுத்தினான்.

உடம்பெல்லாம் நடுங்கிக் கொண்டிருந்தது.

"அந்தோணி... இதை எல்லாம் பார்த்தா எனக்கும் பயமா இருக்குது. பிளம்பர் சீனுவையும் இதே மாதிரி எங்கையாவது கொன்னு புதைச்சுட்டாங்களா?"

-வேணுவுக்கு மழையில் நனைந்த மாதிரி வியர்த்தது.

"இருந்தாலும் இருக்கும்... ஆனா ஒண்ணு! இன்னியோட சரி. நான் நிஜமாலுமே ஓடப் போறேன். எனக்கு இந்த வேலையே வேணாம்ப்பா..."

-அந்தோணி சொல்லிக் கொண்டே இலை அறுக்க ஓடினான்.

வேணுவுக்கு இப்பொழுது நிஜமாலுமே வயிற்றைச் சங்கடப்படுத்தியது. மயக்கமாகவும் வந்தது. ஒரு நிமிடம் வேலை பார்க்கவும் பயமாக இருந்தது. ஓடினான்...

நடுவில் அந்தோணியின் குரல் கத்தரித்தது.

"வேணு... இங்க பாத்ததைப் பத்தி யார்கிட்டேயும் உளறி வைக்காதே..."

"இல்ல அந்தோணி... எனக்கும் இதுதான் கடைசி நாள்!"

-வேணுவும் சொல்லிக் கொண்டே நடந்தான். நல்ல வேளை மகிழ மரத்தடியிலேயே மேனேஜர் நாகசாமி கண்ணில் பட்டார்.

வியர்க்க விறுவிறுக்க வந்தவனைப் பார்த்து திகைத்தார்.

"அய்யா, டாக்டரைப் பார்க்காம சமாளிச்சிடலாம்னு நினைச்சேங்க. ஆனா முடியாது போல இருக்கு. தொட்டுப் பாருங்க. காச்சல் கூட அடிக்குது..."



-அவன் குரல் தந்தியடித்தது.

"சரி சரி கிளம்பு. இரு நான் போய் ஜீப்பை அனுப்பறேன்." -என்றார்.

"வேண்டாங்க. நான் என் வண்டியிலேயே போயிடறேன். எனக்கு லீவு போட்டுருங்க."-என்றபடியே அவனது மொபெட்டைப் போய்த் தொட்டான்.

"ஏய் இருப்பா... இரு... வண்டியில போய் எங்கையாவது விழுந்து கிழுந்து வைக்காதே." -நாகசாமியின் குரலை அவன் காதிலேயே வாங்கிக் கொள்ளவில்லை.

அவனது மொபெட்டும் உதறலோடு கிளம்பியது.

வித்யாசமான மொபெட்டின் சப்தம் கேட்டு எட்டிப் பார்த்தாள் ரேணுகா!

வேணுவின் தங்கை.

இரவான பிறகே வீடு திரும்புபவன் பதினோரு மணிக்கெல்லாம் வந்துவிட்ட ஆச்சரியம் அவள் முகத்தில் தெரிந்தது. அவனும் அந்த எலிக் கூண்டை (மொபெட்டைத்தான்) ஸ்டாண்டு போட்டு நிறுத்தி விட்டு வீட்டினுள் நுழைந்தான். புயல் காற்றில் பறந்து வந்து விழுந்த எச்சில் இலை போல தெரிந்தவனைப் பார்த்து "என்னண்ணே... என்னஆச்சு? ஏன் ஒரு மாதிரி இருக்கீங்க?" என்று படபடத்தாள். அவன் அம்மா அஞ்சுகமும் கீரைக்கட்டோடு தோன்றி "என்னடா இது... வேலைக்கு போவலையா?" என்று கேட்டபடி முன்னால் வந்து நின்றாள்.

"இல்லம்மா... திடீர்னு காச்சலா இருந்திச்சு.அதான் வந்துட்டேன்." -என்றான்.

"காச்சலா...?"-அவளும் பரபரப்பராகி அவன் நெற்றி கழுத்து என்று தொட்டுப் பார்த்துவிட்டு "ஆமாம்... நெருப்பு கொதிக்குதே" என்று கவலையில் விழுந்தாள்.

"என்னண்ணே... டாக்டரைப் போய் பார்ப்போமா...? இல்ல வர்ற வழியிலையே பாத்துட்டியா?"

-ரேணுகாவிடம் வாஞ்சை வழிந்தது.

"பாத்துட்டேன். ஊசிபோட்டு மாத்திரை கொடுத்துரு காரு" -என்றவன் சட்டையை கழற்றும் போதுதான் கவனித்தான். யூனிஃபார்ம்!

அவனது சட்டையும் பேண்ட்டும் அரிமா மாளிகையில் லாக்கரில் இருப்பதே அப்போதுதான் ஞாபகம் வந்தது. அதில் தான் பர்ஸில் இருந்த டிரைவிங் லைசென்ஸ் வரை எல்லாம் இருக்கிறது. பல முக்கிய முகவரிகள் கூட அந்த பர்ஸில்தான் இருக்கிறது.

இனி அந்தப் பக்கம் தலை வைத்தே படுக்கக் கூடாது என்று நினைத்தவனுக்கு சற்று வயிற்றைக் கலக்கவும் செய்தது.

இப்பொழுது அதற்காகவாவது அங்கே போய்த்தான் தீரவேண்டும் என்றாகிவிட்டதே

போய் படுக்கையில் ஒரு கட்டைபோல விழுந்தான்.

"நல்லாத்தானேடா இருந்தே... திடீர்னு காச்சல்னு ஆகி படுத்திட்டியேடா..." என்று சொல்லிக் கொண்டே அஞ்சுகம் வந்து ஆதரவாக அவன் நெற்றியைத் தொட்டு வருடினாள்.

அவனுக்கும் இதமாக இருந்தது.

அப்படியே ஒரு விநாடி ஞானவேலின் சடலம் மனக் கண்ணில் தோன்றி ஒரு மிரட்டும் மிரட்டியது.



அதை ஓவர்டேக் செய்கிற மாதிரி வளர்மதி பொங்கிய மார்போடு கட்டி அணைத்தது வேறு ஞாபகத்தில் தோன்றி ஒரு உலுக்கு உலுக்கியது.

அம்மா அடிக்கடி சொல்லுவாள்.

'விதி வலியது... எழுதியதை யாராலும் மாற்ற முடியாது. நடப்பது நடந்தேதீரும்...' என்றெல்லாம்.

அதெல்லாம் உண்மையோ?

சில மணி நேரங்களில்தான் வாழ்க்கையில் எத்தனை சம்பவங்கள்.

ஒரு கோடீஸ்வரி காமத்தோடு கட்டிப்பிடித்தாள் என்றால் யாராவது நம்புவார்களா?

ஒரு பூவரசங்குழியில் ஒருவன் சடலமாகக்கிடக்கிறான் என்றால்தான் நம்புவார்களா...?

வேணு பற்கள் கிட்டிக் கொள்ள இழுத்து போர்த்திக் கொண்டான். மிகப் புழுக்கமாகிப் போனது.

பின் போர்வையை விலக்கிக் கொண்டு எழுந்து ஃபேனைப் போட்டான். அஞ்சுகமும் "படு வரேன்..." என்று சொல்லியபடி விலகிச் சென்றாள். ரேணுகாவும் ஏதோ வேலையாக வெளியே போய்விட்டிருந்தாள்.

ஃபேனும் சரக் சரக் என்று கழன்று கொஞ்சம்போல காற்றை உமிழ்ந்தது.

அதுவும் சில நிமிடங்கள் வரைதான்!

கரண்ட் கட் ஆகி அதுவும் நின்று போனது.

மீண்டும் புழுக்கம்

அடக்கடவுளே... அலுப்போடு விசிறிக் கொள்ள ஏதாவது கிடைக்குமா என்று பாத்தான். அருகில் ஷெல்ஃபில் ரேணுகா

வின் காலேஜ் நோட்டுகள். அதில் ஒரு பெரிய ரிக்கார்ட் நோட் கண்ணில் பளிச்சென்று பட்டது.

உருவி எடுத்து வந்து விசிறி விட்டுக் கொள்ள தொடங்கினான்.

நான்கைந்து அசைவில் உள்ளிருந்து ஏதோ ஒரு பேப்ப பறந்துபோய் கீழே விழுந்தது.

குனிந்து எடுத்தவன் என்ன பேப்பர் என்று பார்த்தான். நான்காக மடித்து மேலே ஒரு ஹார்ட்டின் படம் வரையப் பட்டிருந்தது.

பிரித்தான்.

பகீரென்றது.

அது ஒரு காதல் கடிதம்.

'என் அன்புள்ள ரேணுகாவிற்கு

உன் இனிய காதல் மடல் கிட்டியது. அதை ஒரு தட வைக்கு நூறு தடவையாவது படித்திருப்பேன். இப்போ தெல்லாம் எனக்கு பெரிய ஆறுதலே உன் கடிதங்கள்தான். உன் காதல்தான் என்னை வாழவைத்தபடி உள்ளது. உள்ள படியே நான் கோடீஸ்வரனாக இருந்தாலும் திருமணம் என்கிற விஷயத்தில் ஒரு ஏழையாகவே இருக்கிறேன் எங்கள் குடும்பம் பற்றிய மிகத் தவறான கருத்துக்கள் வெளியே பரவியுள்ளதால் என் அக்காக்கள் யாருக்கும் திருமணமே ஆகாத ஒரு நிலை.

அதனால எனக்கும் திருமணம் என்பது ஒரு கனவாகி விடுமோ என்ற நிலையில்தான் உன்னை கல்லூரியில் சந்தித்தேன். நான் உன்னைக் காதலித்த அதே சமயம் நீயும் என்னை நேசித்திருக்கிறாய் என்பதும் தெரிந்தது. ஆறு அக்காக்கள் நடுவில் ஒரு பெண் பிள்ளைபோலவே என் அப்பா என்னையும் வளர்த்துவிட்டார். என்னை ஒரு நல்ல



ஆண்மகனாய் வளர்க்க வேண்டிய என் அம்மாவோ நான் மூன்று வயதாக இருக்கும்போது போய்விட்டாள். இப் பொழுதுதான் நான் உலகத்தையே பார்க்கத் தொடங்கி யிருக்கிறேன். அதுவும் உன் மூலமாக... உண்மையில் என் குடும்பத்தில் எந்த மர்மமும் இல்லை. என் அக்காக்களுக்கு திருமணமானால் அவர்கள் விதவைகள் ஆகிவிடுவார்கள் என்பதெல்லாம் ஒருவித பொய் நம்பிக்கை. எங்கள் மாளி கையில்தான் யாரோ இருந்து கொண்டு சதி செய்கிறார்கள்.

அவர்களைக் கண்டுபிடிக்கத்தான் நானும் ஒன்றும் தெரி யாத பெண்பிள்ளைபோல நடந்து கொண்டிருக்கிறேன். உன் அண்ணன் பற்றி கவலைப்படாதே. இன்று ஒரு எலெக்ட்ரீஷியன் ஆக உள்ள அவர் கூடிய விரைவில் எனக்கு மைத்துனராகி அரிமா மாளிகைக்கும் உறவுக்கார ராகி விடுவார்.

நமது காதல் நிச்சயம் வெற்றி பெறும். சிறிது காலம் பொறுத்துக்கொள்.

என் சகோதரிகளுக்கு நல்ல மாப்பிள்ளைகள் கிடைக் கட்டும். அதற்குமுன் எங்கள் குடும்பத்தை சாபத்தின் பெய ரால் ஆட்டிப்படைக்கும் நபர்களைக் கண்டுபிடித்து அவர் களுக்கு ஒரு முடிவு கட்டுகிறேன். அதுவரை கடிதங்கள் உன்னையும் என்னையும் தாலாட்டட்டும். இன்று நாம் சந்திக்கும் இடத்திற்கு தவறாமல் வா. மற்றவை நேரில்.

அன்புடன்,
மார்த்தாண்டன்.

கடிதத்தைப் படித்த வேணுவுக்கு தலையே வெடித்து விடும் போல இருந்தது.

ஒரே நாளில் அவன் சந்திக்கும் மூன்றாவது திருப்பம் இது.

கடிதத்தை மடித்து நோட்டில் வைத்துவிட்டு பொதேல் என்று படுக்கையில் விழுந்தான்.

'அக்கா காதலிக்க முயற்சிதான் செய்தாள்...ஆனால் தம்பியோ காதலித்துக் கொண்டே இருக்கிறான்..

உலகமறியாதவள் என் தங்கை என்று நினைத்துக் கொண்டிருந்ததெல்லாம் எவ்வளவு பெரிய பொய்!'

வேணு மல்லாந்து படுத்துக் கொண்டு பெருமூச்சு விட்டான்.

'அடுத்து என்ன செய்வது?'

## 4

**"வி**தியை எழுதுவதே மதிதான்! எழுதும்போதே வெற்றிக்கு இடம் கொடுத்து எழுதி விட்டால் அதன்பின் அதனுடன் மோதி ஜெயித்துவிடலாம். ஆனால் அது அத்தனை சுலபமல்ல. தப்பாக விதியை எழுதுபவர்கள் அதனிடம் மாட்டிக் கொண்டு விழித்தே தீர வேண்டும்.""

**அ**ரிமா மாளிகை!

மேனேஜர் நாகசாமியின் ஜீப் மாளிகை கட்டிடம் முன்னால் கிரீச்சிட்டு நின்றது.

அவரும் இறங்கி உள்ளே நுழைந்தார்.

எதிர்ப்பட்டான் அட்டெண்டர் பெரியசாமி.

"அய்யா! உங்களை பெரியவர் கேட்டாருங்க!"

அடுத்து அவர் கால்கள் பெரியவரின் அறை நோக்கித்தான் நடந்தன.



பெரியவர் என்று அவர்கள் மரியாதையாகக்கூப்பிடும் பொன்னம்பலம், அறையில் சில்க் ஜிப்பாவும் வேட்டியுமாக ஏக தோரணையாக உட்கார்ந்து கொண்டிருந்தார். நெற்றியில் பெரிதாக விபூதிப் பந்தல். நடுவில் சந்தனம். குங்குமம், செந்தூரம் என்று திலக வகையறாக்களில் ஒன்றுகூட பாக்கி இல்லை.

"என்ன நாகசாமி... வேணுவுக்கு எப்படி இருக்கு?"

"நல்ல காய்ச்சலுங்க. பாத்துட்டு பணம் கொடுத்துட்டு இப்பதான் வர்றேன்."

"நல்லது... அப்புறமா ஒரு முக்கியமான விசயம்..."

"என்னங்க...?"

"நம்ம ராஜபாளையம் பக்கத்துல இருக்குதே சதுரகிரி மலை... கேள்விப்பட்டிருக்கியா?"

"என்னங்க அப்படிச் சொல்லிட்டீங்க... மகாலிங்க மலைன்னுகூட அதைச் சொல்லுவாங்களே..."

"கரெக்ட்... அந்த மலைல ஆறுமுகசாமின்னு ஒரு சித்தர் இருக்குறாராம்..."

"அவருக்கென்னங்க இப்போ...?"

"அந்த சித்தர் ரொம்ப சக்தி வாய்ந்தவராம். நம்ம லயன் டாக்டர் லோகநாதன்தான் சொன்னான்."

"சரிங்க..."

"அவரு நம்ம மாளிளைக்கு வந்து ஒரு பூசை பண்ணா எங்க குடும்பத்தை பிடிச்சு ஆட்டிக்கிட்டிருக்கற சாபமெல் லாம் சாம்பலாப் போயிருமாம். ரொம்ப நம்பிக்கையா சொன்னான் லோகநாதன்."

"அப்ப அந்த பூஜைக்கு ஏற்பாடு செய்ய வேண்டியது தானுங்களே...?"

"அதுக்குத்தான் இப்ப உன்கிட்ட விபரம் சொல்லிகிட்டு
இருக்கேன். அந்த பூசை காதும் காதும் வெச்ச மாதிரி நடக்
கணும். அது நடக்கறப்ப இங்க மாளிகைல என் மகளுங்களோ,
மகனோகூட இருக்கக்கூடாது. இது ரொம்ப முக்கியம்."

"ஏன்யா... அவங்க இருந்தா என்ன?"

"எனக்கு ஒண்ணும் இல்லை. ஆனோ லோகநாதன்
அப்படித்தான் சொன்னான்."

"சரிங்க... உங்க விருப்பப்படியே செய்துடுவோம். உங்க
மக்களை நம்ம கொடைக்கானல் மாளிகைக்கு அனுப்பிடு
வோம்."

"அவங்கள அனுப்பறது இருக்கட்டும். முதல்ல நீயும்
நானும் போய் அந்த சித்த சாமியாரைப் பார்த்துட்டு வரு
வோம். என்ன சொல்றே?"

"நீங்க சொன்னா சரிங்க. எப்பங்க கிளம்பலாம்?"

"இன்னிக்கு வேணாம். விட்டுடு. நாளைக்கு காலைல ஒரு
அஞ்சு மணிக்கெல்லாம் கிளம்பிடலாம். நம்ம வண்டியில
7272சுமோவை பெட்ரோல் போட்டு ரெடியா வை. டிரைவர்
வேண்டாம். நானே டிரைவ் பண்ணிட்றேன்."

"ஆகட்டுங்க..."

"ஆமா அந்த ஞானவேல் பயலப்பத்தி ஏதாவது தெரிஞ்
சிச்சா?"

"தெரியலீங்க... எங்க போனான்னே தெரியல."

"பெருஸ்ஸா என்னப்பாத்து 'உங்ககூட மனசுவிட்டு
பேசணும் முதலாளி'ன்னான். கடைசில என்னடான்னா ஆளே
காணாம போய்ட்டான்..."

"இப்படி வேலைக்கு வராம ஓடிப் போறதுங்கறது புதுசுங்
களா என்ன?"



"அடிக்கடி இப்படி நடக்குது. அதுதான் எனக்கு ஏன்னே
தெரியலை. என் குடும்பம் எப்படி இருந்தாலும் நம்மகிட்ட
வேலை பாக்கறவங்களுக்கு நான் ஒரு குறையும் வைக்கற
தில்லை. இருந்தாலும் இங்க வேலை பாக்க பயந்துகிட்டு
ஓடிடும் போது மனசுக்கு சங்கடமாயிடுது."

"என்னங்க பண்றது. ஒண்ணுன்னா ஒன்பதுன்னு பேசற
உலகமா இருக்குது. எது எப்படி இருந்தாலும் நம்ம பாப்பாங்
களுக்கு கல்யாணம் ஆகி அவங்க புருஷன்களோட சந்தோ
ஷமா வாழ்ந்தாதாங்க ஒரு மாதிரி பேசறதும், பயப்படறதும்
நீங்கும்."

"அதுக்குதான் அந்த சித்தரை பார்க்கணும்கறேன். அவர்
இங்க கால் வெச்சாலே எல்லாம் சரியா போயிடும்னு சொன்
னான் லோகநாதன். நானும் அவரைத்தான் இப்ப மலை போல
நம்பியிருக்கேன்."

பொன்னம்பலம் ஆசுவாசத்துடன் பேசவும், நாகசாமி
முகத்திலும் ஒருவித நம்பிக்கை பளிச்சிட்டது.

அந்த வேளை பார்த்து அரக்க பரக்க ஓடிவந்தான் ஒருவன்.

அவனிடம், மேல் மூச்சும் கீழ் மூச்சும் முட்டித் தள்ளியது.

"என்னய்யா... எதுக்கு இப்படி மூச்சு வாங்குது உனக்கு.
என்ன விசயம்?"

"அய்யா... அய்யா..."

"என்ன... முதல்ல விசயத்தைச் சொல்லு..."

"நம்ம தோட்டக்காரன் அந்தோணி இல்லீங்க... அந்
தோணி..."

"அவனுக்கென்ன...?"

"தோட்டத்துல வாழை இலை அறுத்துக்கிட்டிருந்த
அவனை நல்ல பாம்பு கடிச்சிடுச்சுங்க. வாய்ல நுரை தப்ப
விழுந்து கிடக்கறாங்க!"

-வந்தவன் சொன்ன விஷயம் பொன்னம்பலத்தின் இத யத்தை ஒரு கிள்ளு கிள்ளியது.

நாகசாமி முகமும் இருண்டு போனது.

"அய்யா நீங்க இருங்க... நான் போய் என்னன்னு பாக்க றேன்..."

நாகசாமி அங்கிருந்து வேகமாக புறப்பட்டார்.

**வா**ழைத்தோட்டத்தில் வழக்கமான ஆடிக்காற்றின் ஆவேச விளையாட்டு...

'உய்ய்... உய்ய்' என்று ஒருவிதமான சப்தம்.

மாளிகைப் பணியாளர்கள் சிலர் சூழ்ந்திருக்க அந்தோணி விரைத்துப் போய்க் கிடந்தான். உயிர் எப்பொழுதோ போய் விட்டிருந்தது.

காலில் கட்டு போட்டு, கத்தியால் கீறி ரத்தத்தை உறிஞ்சி முதலுதவி எல்லாம் செய்யப்பட்டிருந்தும் பலனில்லை.

சற்றுதள்ளி அவனைக் கடித்த பாம்பையும் அடித்துப் போட்டிருந்தார்கள்.

நாகசாமி நெற்றியைத் தேய்க்கத் தொடங்கினார்.

"என்னய்யா... என்ன நடந்துச்சு?" -என்று சுற்றி இருப்ப வர்களைப் பார்த்துக் கேட்டார்.

ஒருவன் விளக்க ஆரம்பித்தான்.

"அய்யா, அந்தோணி பாம்பு பாம்புன்னு கத்தற சப்தம் கேட்டு ஓடி வந்தேங்க. வந்து பார்த்தப்போ இந்த பாம்பு அவன் காலை வளைச்சுகிட்டு நின்னுகிட்டிருந்துச்சுங்க.

எங்களுக்கு என்ன பண்றதுன்னே தெரியல. அதை அடிச்சு துரத்த ஒரு கம்பைத் தேடி எடுத்துகிட்டு வரதுக்குள்ள அது நல்லா நாலு போடு போட்ருச்சுங்க. ஒரு மாதிரி கஷ்டப்பட்டு



கால் மேலயே அடிச்சோம். எவ்வளவு அடி வாங்கியும் வில காம எங்களைப் பார்த்து சீறி எங்களையும் கடிக்க வந்துச்சுங்க.

எப்படியோ ஒரு வழியா அதை அடிச்சு போட்டுட்டோம். அப்பால அந்தோணி இலை அறுக்க வெச்சுருந்த கத்தியா லையே கொத்துபட்ட இடத்துல கீறி நான்தாங்க ரத்தத்தை உறிஞ்சினேன். இருந்தும் பிரயோஜனமில்லீங்க. விஷம் விறு விறுன்னு ஏறி..."

-அவன் ஏற்ற இறக்கமுடன் சொல்லிவிட்டு அவன் கண்களிலும் கண்ணீரைத் தேக்கினான்.

"சரி... அவன் தலை எழுத்து இப்படி பாம்புகிட்ட கொத்து வாங்கிச் சாகணும்னு இருக்குது. என்ன பண்ண? எதுக்கும் டாக்டரை அனுப்பறேன். அவர் வந்து பாத்து சட்டப்படி செய்ய வேண்டியதை செய்யட்டும். இல்லேன்னா அய்யா வுக்குதான் பேர் கெட்டுப் போகும்... நீங்க இங்கையே இருங்க."

-நாகசாமி வருத்தமும் எதார்த்தமும் கொப்பளிக்க பேசி விட்டு அங்கிருந்து விலகத் தொடங்கினார். விலகும்போது அந்தப் பாம்பை ஒரு பார்வை... ஆறடி நீளத்தில் கைப் பருமனில் இருந்தது! அதை பிய்த்துப் பிடுங்கிப் போட் டிருந்தார்கள்.

'ப்ச்ச்...' -நாகசாமி பாம்புக்காக வருந்தினாரா இல்லை அந்தோணிக்காக வருந்தினாரா என்பதுதான் தெரியவில்லை!

**பெ**ரியவர் பொன்னம்பலம் கைகளைக் குத்திப் பிசைந்து கொண்டார். அந்த ஏரியா போலீஸ் இன்ஸ்பெக்டர் வந்திருந் தார். பொன்னம்பலம் வருந்துவதைப் பார்த்து, "நீங்க எதுக்கு அநாவசியமாக கவலைப்படறீங்க. இட் ஈஸ் எ ஆக்சி டெண்ட். யார் என்ன பண்ண முடியும், சொல்லுங்க பார்ப் போம்." -என்று ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தார்.

"நீங்க என்ன சொன்னாலும் என் மனசு சமாதானப்ப மாட்டேங்குதுங்க. அந்தோணி ரொம்ப நாளா இங்க கார் னரா இருக்கான்.அவன் அப்பாவும் இங்கதான் இருந்தாரு அவன் ரிட்டையர் ஆகிப்போகும்போது பையனுக்கு வேலை கேட்டான். சரின்னு போட்டுக் கொடுத்தேன். அவனை மாதி 58வயசு வரை இவனும் இங்க வேலை பார்த்து ரிட்டைய ஆகியிருந்தா சந்தோஷப்பட்டிருப்பேன். இப்படி அநியாய செத்துப் போயிட்டானுங்களே...!" -பொன்னம்பலத்திட நிஜமாலுமே வருத்தம் கொப்பளித்தது.

"அதுக்கு என்ன பண்ண..? அவன் தலை எழுத்து அப்ப ஆயிடிச்சு. விடுங்க. எதுக்கும் பாம்பு பிடிக்கறவங்களவிட்டு உங்க காம்பவுண்டுல பாம்புங்க இருந்தா பிடிச்சுகிட்டு போக சொல்லுங்க. அதுதான் இப்ப உங்களால பண்ண முடிஞ்சது" -இன்ஸ்பெக்டர் சொல்லிவிட்டு கை குலுக்கிவிட்டு புறப் பட்டுப் போனார்.

நாகசாமி மௌனமாக அருகில் நின்று கொண்டிருந்தார்.

"நாகசாமி... நம்ம அக்கவுண்டண்ட்கிட்ட அந்தோணி பொண்டாட்டிக்கு நஷ்ட ஈடா ஒரு லட்ச ரூபாயை சேர்த்து கொடுக்கச் சொன்னேன்னு சொல்லுங்க. ஏதோ என்னால முடிஞ்சது..." என்று தலையை குனிந்து கொண்டார் பொன் னம்பலம். நாகசாமி மறுபேச்சு பேசாமல், "சரிங்க" என்றபடி கிளம்பினார்.

## 5

"**வி**தியும் பாம்பும் ஒரு வகையில் ஒன்றுதான். மகுடி வாசித்து பாம்பைப் பிடித்து கூடையில் அடைத்து வைக்கிற மாதிரி விதியையும் புத்திசாலித் தனமாக நமக்கு சாதகமாக அடக்கி வைத்து சாதுர்யம் காட்டலாம்! அதனால் விதி நமக்கு அடங்கி அடிமைப் பட்டு விட்டதாக மட்டும் உருகி விடக்கூடாது.

அதன் விஷப்பற்கள் நம்மைக் கடிக்க எப்பொழுதும் காத்திருக்கும்..."



**வே**ணு ஸ்தம்பித்துப் போயிருந்தான்!

அந்தோணியை பாம்பு கடித்து அவன் செத்துவிட்ட விஷயத்தை சில நிமிடம் முன்புதான் அவன் சகா ஒருவன் வந்து சொல்லிவிட்டுப் போயிருந்தான்.வேணுவால் அதை நம்ப முடியவில்லை. நிச்சயம் பாம்பு தானாக வந்து அவ னைக் கடித்திருக்க வாய்ப்பு இல்லை என்றுதான் தோன்றியது.

விஷயத்தைச் சொன்னவன் "பெரியவர் உன்னை மறக் காம நம்ம டாக்டரைப் போய் பார்க்கச் சொன்னாரு... இல்லாட்டி டாக்டரே உன்னைப் பார்க்க வீட்டுக்கு வந்தாலும் வரலாம்..." என்று சொன்னது அவன் நெஞ்சையடைத்தது.

நெஞ்சில் அடைப்பு ஏற்பட்ட அதே வேளையில் அவன் வீட்டு வாயிலிலும் அரிமா மாளிகைக்கு சொந்தமான ஜீப்பின் தேக்கம்!

எட்டிப் பார்த்தவனுக்கு பகீர் என்றது.

டாக்டர் இறங்கிக் கொண்டிருந்தார்.

கையில் பிரீஃப்கேஸ்.

ஒரு விநாடி அவர் எமனாகவே வேணுவின் கண்ணுக்குத் தெரிந்தார்.

'ஞானவேலை கொன்று புதைத்ததை எப்படியோ கண்டு பிடித்துவிட்ட அந்தோணி ஒரு வழியாக உலகை விட்டு அனுப்பப்பட்டு விட்டான்.'

'அடுத்து நானா?'

வேணுவுக்கு கைகாலெல்லாம் நடுங்கியது.

டாக்டர் சிரித்தபடி உள்ளே வந்தார்.

"என்ன வேணு... நல்ல டெம்பரேச்சராமே...? என்ன டிஸ்பென்சரில் வந்து பாக்காம இப்படி வீட்டுக்கு வந் படுத்துட்டா எப்படி காய்ச்சல் குணமாகும்?"

-டாக்டர் விசாரித்தபடியே அவன் அருகில் வந்து அமர்ந் வராக அவன் கையையும் இழுத்துப் பிடித்து நாடி பார்க் ஆரம்பித்தார்.

சூழ்ந்து நிற்கும் அஞ்சுகமும், ரேணுகாவும் லேசாக அதிர் தார்கள்.

"அண்ணன் உங்களைப் பாத்து ஊசிபோட்டுகிட்டு வந் தால்ல சொன்னிச்சு..." -என்று ரேணுகா காலையில் அவ சொன்னதை அப்படியே போட்டு உடைத்தாள்.

"அப்படியா... அப்படியா சொன்னே...?"

கேள்வியோடு ஸ்டெதாஸ்கோப் அவன் மார்பின் மேல் பதிந்தது.

"என்னப்பா... எதுக்கு உன் இதயம் இப்படி துடிக்குது எ காதையே அடைக்கற மாதிரி..."

-வேணு எதுவும் பேசாமல் அவரையே வெறித்தான்.

"டெம்ப்ரேச்சர் இருக்கு... அதேசமயம் எதையோ பாத் மிரண்டு போயிட்டபோல இருக்கு."

-அவர் சாதாரணமாக சொன்னாரா, இல்லை அவனுக்கு மட்டும் புரியும் என்று திட்டமிட்டே சொன்னாரா என்று தெரியவில்லை.

"டாக்டர் எனக்கு எதுவுமில்லை. நான் நல்லாத்தான் இருக்கேன்..." -என்று அவர் எதிரில் தைரியத்தை வர வழைத் தவனாக எழுந்து உட்கார்ந்தான். அவர் சட்டையே செய்யாமல் ப்ரீஃப்கேசில் இருந்து இஞ்செக்ஷன் சிரிஞ்சை யும் ஒரு ஆம்ப்யூல் ஊசி மருந்து ஒன்றையும் எடுத்தார்.



"டாக்டர் எனக்கு ஒண்ணுமில்ல டாக்டர்...எதுக்கு எனக்கு இப்ப ஊசி போட்றீங்க..? வேண்டாம்" -அவர் பேச்சுக்கு பேச்சு செயலுக்கு செயல் என்று சிரிஞ்சில் மருந்தை உறிஞ்சத் தொடங்கியிருந்தார்.

"இல்ல... நான் ஊசி போட்டுக்கமாட்டேன். எனக்கு எதுவும் இல்லை.சொன்னாக்கேளுங்க..." -அலறினான் வேணு.

"டேய் என்னடா இது... எதுக்காக வீடு தேடிவந்து உனக்கு வைத்தியம் பாக்கறவர்கிட்ட இப்ப காட்டுக் கத்து கத்தறே... மரவட்டை மாதிரி சுருண்டே படுத்துகிட்டிருந்துட்டு உடம்பு நல்லாத்தான் இருக்குன்னா என்னடா அர்த்தம்...?" -அவன் அம்மா அஞ்சுகம் டாக்டருக்கு வக்காலத்து வாங்கினாள்.

"விடுங்கம்மா... நல்ல விஷ ஜுரம். கான்ஷியஸே இல்லாம போகக்கூட வாய்ப்பிருக்கு... ஒரு ஊசி போட்டாத்தான் கண்ட்ரோல் ஆகும். இல்லேன்னா பெரியவருக்கு என்னால பதில் சொல்ல முடியாது." -டாக்டர் ஊசி முனையில் மருந்தைப் பிலிற்றினார்.

வேணு அவரை அதிகபட்ச மரண பயத்தோடு பார்த்தான்.

அது மருந்தாகவே அவனுக்குத் தெரியவில்லை. விஷமாக அந்த பிளாஸ்டிக் குழாயினுள் சிவப்பு நிறத்தில் குலுங்கியது.

"வேண்டாம் டாக்டர்... இது மருந்து இல்ல... விஷம். எனக்குத் தெரியும். நீங்க என்னைக் கொல்லத்தான் வந்திருக்கீங்க. பெரியவர் உங்களை அதுக்குத்தான் அனுப்பியிருக்கார்... நான் ஞானவேலைப் பார்க்கலை. அவன் பொணத்தைப் பார்க்கலை. என்னை நம்புங்க. எனக்கு எதுவும் தெரியாது... என்னை விட்றுங்க. என்னை விட்றுங்க..."-அவனது அலறலில் வீட்டுக் கூரையே நடுங்கியது.

டாக்டரே ஒரு க்ஷணம் அதிர்ந்து போனார்.

இஞ்செக்ஷன் சிரிஞ்சை படுவேகமாக தூர வைத்தவ அவனையே ஊன்றிப் பார்த்தார்.

அஞ்சுகமும் ரேணுகாவும் கூட அவன் பேச்சால் ஆடி போயிருந்தார்கள்.

அவனோடு படுக்கையை விட்டு எழுந்து அந்த அறை யின் ஒரு மூலைக்குப்போய் அப்படியே மண்டியிட்டு குறுகி போயிருந்தான்.

மறுநாள் காலை ஒன்பது மணி. வீட்டுமுன் சீறிக்கொண்டு வந்து நின்றது பெரியவரின் வாக்ஸ்ஹால்.

அவரும் அதிலிருந்து இறங்கினார்.

அஞ்சுகமும் ரேணுகாவும் விழுந்தடித்துக் கொண்டு வரவேற்றார்கள்.

"எங்கம்மா வேணு...?"

"உள்ற படுத்துருக்காங்கய்யா..."

"நான் பாக்கணுமே..."

"என்னய்யா கேள்வி இது..? தாராளமா போய் பாருங்க. இது உங்க வீடுங்க." -அஞ்சுகம் கை காட்ட பொன்னம்பலமும் அறைக்குள் நுழைந்தார்.

வேணு வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்து நின்றான்.

"உக்காருய்யா... இப்ப எப்படி இருக்கு உடம்பு?"

அவனிடம் இறுக்கமான மௌனம்.

"ராத்திரியெல்லாம் தூங்கலைங்க. ஒரே உளறல். என்னை கொலை செய்யப் போறாங்க. நானும் செத்துடப் போறேன்னு ஒரே புலம்பலுங்க..." -அஞ்சுகம் அருகில் வந்து எடுத்துக் கொடுத்தாள்.



"என்ன வேணு...ஞானவேல் பத்தி ஏதோ பேசினியாமே?" அவர் நேராகவே விஷயத்துக்கு வந்தார்.

"இல்ல... நான் எதுவும் பேசலை. நான் எதுவும் பாக் கலை." -அவனிடம் வார்த்தைகள் தந்தி அடித்தன.

"பயப்படாதே... உன்னை யார் கொலை செய்யப் போறாங்க. எதுக்கு உன்னைக் கொலை செய்யணும்?"

-அவன் பதில் பேசாமல் நிற்க நெற்றியில் பொட்டுப் பொட் டாக வியர்த்தது.

"கேக்கறேன்ல... சொல்லு. நீ எதையோ பாத்துருக்கே. அதான் பயந்து பாதியிலேயே வீட்டுக்கு வந்துட்டே. என்ன பார்த்தே...? ஞானவேலுக்கு என்ன ஆச்சு?"

"இல்ல... நான் எதையும் பாக்கலை. என்னை விட்றுங் கய்யா. நான் யார்கிட்டேயும் எதையும் சொல்லமாட்டேன். எங்கம்மா மேல சத்தியம்!"

"பைத்தியக்காரா... ஏன் இப்படி உளர்றே? நான் ஏற்கனவே அந்தோணி சாவால மனசு உடைஞ்சு போயிருக்கேன். இப்ப நீ வேற கண்டதைப் பேசி என்னைக் குழப்பாதே. நான் உன் முதலாளி. இந்த ஊர்ல எனக்குன்னு ஒரு பேர் இருக்கு. எதுவா இருந்தாலும் தைரியமா சொல்லு..."

"இல்ல... வேண்டாம்... என்னை விட்றுங்க. நான் எதுவும் பார்க்கலை."

"இப்படிச் சொன்னாலே எதையோ பாத்துருக்கேன்னுதான் அர்த்தம். என்ன பார்த்தே ...? எதைப் பார்த்தே..? கமான்..."

"டேய் ஏண்டா இப்படி முதலாளிகிட்ட அழிச்சாட்டியம் பண்றே... என்னத்தடா பார்த்தே...? சொல்லுடா...!"

-நடுநடுவே அஞ்சுகமும் சேர்ந்து ஒத்து ஊதினாள்.

அவனாலும் அதற்கு மேல் சமாளிக்க முடியவில்லை.

'ஒரு கொலை செய்தவராக இருந்தால் இப்படி வீடு தே வந்து இதைப் பற்றி விலாவரியாக பேசவே மாட்டா ஒருவேளை மார்த்தாண்டன் ரேணுகாவுக்கு எழுதிய கடித தில் உள்ளதுபோல இது மற்றவர்களின் சதி வேலையா?

நிஜமாலுமே பொன்னம்பலத்துக்கு எதுவும் தெரியாதோ -வேணுவின் மனசுக்குள் கேள்விகள் விளையாட்டுக் குழ தைகள் போல எம்பிக் குதித்தன.

தொடர்ந்து பயந்து கொண்டு சுருண்டு கிடப்பதும் வெறு பைத் தந்தது.

'என்னுடைய தைரியமெல்லாம் எங்கே போயிற்று...? அ இப்படி தொடை நடுங்குகிறது... மனதுக்குள் பயப்பேய் புகு தாலே இப்படித்தானோ...?'

சரேலென்று போர்த்திக் கொண்டிருந்த போர்வையை விசிறி எறிந்தான்.

எழுந்து நின்றான்.

"ஆறுலையும் சாவு- நூறுலையும் சாவு. வாங்கய்யா எல்லா விஷயத்தையும் சொல்றேன். சொல்றதுமட்டுமல்ல... ஞான வேலோட பொணத்தையும் காட்றேன்."

-என்றபடி வாசல் நோக்கி நடந்தான்.

"அப்படின்னா ஞானவேல் ஊரைவிட்டு ஓடிப் போக லையா? உலகத்தைவிட்டே போய்ட்டானா?"

-அவரும் கேள்வியோடு அவனோடு நடந்தார்.

ஜீப்பும் திரும்பவும் சீறிக் கொண்டு கிளம்பியது.

அஞ்சுகம் தலையில் கை வைத்துக் கொண்டு ஒரு ஓரமாய் போய் அமர்ந்தாள்.

ஆனால் ரேணுகா அப்படி எல்லாம் ஆடிப் போய்விட வில்லை.



"அம்மா, தைரியமா இரு... அண்ணன் வேலை பாக்கற அரிமா மாளிகை பத்தி எவ்வளவோ கேள்விப்பட்ருப்பே. பணக்கார இடத்து விஷயம் மேடும் பள்ளமுமாத்தான் இருக் கும்னும் நினைச்சு பையன் சம்பளம் கொண்டு வந்தா போதும்னும் நினைச்சிருப்பே.

ஆனா உண்மையிலேயே பெரியவரும் அவங்க குடும்பமும் ரொம்ப பாவம்மா..."

-ரேணுகா அஞ்சுகத்திற்கு ஒரு புதிய கோணத்தை காட்டினாள்.

"என்னடி ரேணுகா சொல்றே... அங்க அப்படி என்னதான் இருக்குது...?"

"சாபம்கற பேர்ல பெரிய சதிவேலையே அங்க நடந்துகிட் டிருக்கும்மா..."

"என்ன சொல்றேன்னே புரியலியே... உனக்கு எப்படிடி தெரியும்?"

-அந்தக் கேள்வி அவளை ஒரு பெரிய கயிறால் கட்டிப் போட்டது.

"சொல்லுடி... உனக்கு எப்படி தெரியும்?"

"அதான் எல்லாரும் பேசிக்கறாங்களே..."

"அவங்க வீட்ல யாருக்கும் கல்யாணமே ஆகலை. ஆனா வர்ற புருஷன்காரன் செத்துடுவான்னு ஒரு நம்பிக்கை இருக் குது. அதுதான் எனக்கு தெரியும். அதுக்கு மேல அந்தக் குடும்பத்துல என்ன இருக்கு...?"

"அதேதாம்மா... அதேதான்... அதுதான் எனக்கும் தெரி யும்..."

"சரி... இவன் யாரோ ஞானவேல்ங்கறான். அவனை கொன் னுட்டாங்கன்னு சொல்றான். அவரோ அவன் ஊரை விட்டு

ஓடிட்டான்னு சொல்றாரு. என்னடி சமாச்சாரம்? எனக்கு ஒரே குழப்பமா இருக்குதுடி..."

"எனக்கும் தாம்மா... உன்னை மாதிரிதானே நானும்?" -ரேணுகா கொஞ்சம் வாய்விட்டாலும் திரும்ப இழுத்து கட்டிக் கொண்டாள்.

"ரேணுகா... நம்ம வேணுவுக்கு எதுவும் ஆயிடாதே..?"

"கவலப்படாதம்மா... அதான் பெரியவரே துணையா இருக் காருல்ல...?"

"கடவுளே... என்னென்னமோ நடக்குதே. நிம்மதியா அவன் உண்டு அவன் வேலை உண்டுன்னு இருந்தான். இப்ப ஏதேதோ காதுல விழுவுதே..."

"சப்தம் போடாதே... அக்கம்பக்கத்துல அப்புறம் கண் டதை பேச ஆரம்பிச்சுடுவாங்க. நானும் இப்ப அரிமா மாளி கைக்கு போய் என்ன நடக்குதுன்னு பார்த்துட்டு வரேன்..."

"ஐயோ நீயா... தனியாவா?"

"அதான் அங்க அண்ணன் இருக்குல்ல?"

துணிச்சலாக ரேணுகாவும் கிளம்பினாள்!

# 6

"மன்னன் பரீட்சித்து விதியை எதிர்த்தவர்களில்
முதலாமவன்.
ஆனாலும் பூநாகம் கடித்து மாண்டு போனான்.
ஆனால் கௌசிகனான விசுவாமித்திரர் ஈரேழு
பதினான்கு உலகிலும் தனக்கு மரியாதையான
இடமில்லை என்று தெரிந்ததும் அயர்ந்துவிடவில்லை
தன் தவ சக்தியால் ஒரு புதிய உலகத்தையே
சிருஷ்டி செய்தார். விதி ஒருவரிடம் வெற்றி பெற்றது
இன்னொருவரிடமோ தோல்வியுற்றது...!"



**வா**ழைத் தோட்டம் நோக்கி நடந்து கொண்டிருந்தார் பொன்னம்பலம். கூடவே அவரைத் தொடர்ந்து கொண்டிருந் தான் வேணு.

மேனேஜர் நாகசாமி எங்கே போனார் என்று தெரிய வில்லை. இருவரும் ஒருவித ஆவேசத்துடன் தோப்புப் பக்கம் நடந்து செல்வதை பெரியவரின் பெண்கள் மாடியில் இருந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

சகோதரிகளோடு உட்கார்ந்து கேரம்போர்டு விளையாடிக் கொண்டிருந்த மார்த்தாண்டனும் அதைப்பார்த்துவிட்டு தன் சகோதரிகளைப் பார்த்தான்.

"அப்பா எங்க போறாருன்னு தெரியலியே..."

-வளர்மதி கையை உதறினாள்.

"இப்படி எல்லாம் அவர் ஒரு வேலைக்காரன் கூட சரிசமமா பேசவோ அவங்களோட எங்கையும் போகவோ மாட்டாரே..."

-வண்ணமதியும் ஆச்சரியப்பட்டாள்.

"இருங்க என்னன்னு போய் பார்த்துட்டு வரேன்..."

-மார்த்தாண்டன் அங்கிருந்து கிளம்பினான்.

"தம்பி வேண்டாம். அப்புறம் அப்பா திட்டுவாரு..."

-அவர்களின் எச்சரிக்கையை அவன் காதிலேயே வாங்கிக் கொள்ளவில்லை. ஓடினான்!

தோட்டத்தில் பூவரச மரக்குழி அருகே பொன்னம்பலமும் வேணுவும் நின்று கொண்டிருந்தனர்.

"இங்க... இந்த மரக்கன்னுக்கு கீழதான் ஞானவேலோட உடம்பை நான் பார்த்தேன்." -வேணு சொல்லியதோடு நில்லா மல் ஓடிப்போய் ஒரு மண்வெட்டியை எடுத்து வந்தான். வேகவேகமாய் தோண்டத் தொடங்கினான். மண் கவளங்கள் பெயர்ந்து பெயர்ந்து ஒரு ஓரத்தில் மலையாட்டம் குவிந்தது.

'ஒரு அடி... இரு அடி... மூன்று அடி...' என்று குழி ஆழமாகிக் கொண்டே போனது.

ஐந்தாவது அடியின்போது குப்பென்று துர்நாற்றம் வீசியது. பொன்னம்பலம் அதிர்ச்சியோடு மூக்கைப் பொத்திக் கொண்டார்.

வேணுவும் அதன்பிறகு நிதானமாக தோண்டத் தொடங்கினான்.

மண்வெட்டியின் ஒரு வெட்டுக்கு ரத்தச் சகதி மண் கவளத்தோடு சேர்ந்து வந்தது.

'பார்த்தீங்களா...' என்கிற மாதிரி ஒரு பார்வை பார்த்தான். அடுத்த கவளங்களில் அவனை ஒரு செத்த நாயின் உடம்பு வரவேற்றது.

வயிற்றுப் பாகத்தில் வெட்டு விழுந்து நாயின் குடலும் சதையும் மண்ணோடு கலந்து துர்நாற்றத்தோடுகூடி ஒரு அமட்டு அமட்டியது.

வேணுவுக்கு சுரீர் என்றது.

பெரியவரை அதிர்வு குறையாமல் பார்த்தான்.

"என்ன வேணு... ஞானவேல் உடம்பை காட்டறேன்னுட்டு ஒரு செத்த நாயோட உடம்பை காட்டறே... இது இந்த தோட்டத்துப் பக்கம் சுத்திகிட்டிருந்த நம்ம காவல் நாய் டிக்கி இல்ல..."

"அய்யா... இங்க இந்த குழியிலதான் நேத்து காலையில் நான் ஞானவேல் உடம்பைப் பார்த்தேங்க."

"அப்ப எப்படிய்யா நாயோட உடம்பு இங்க வந்துச்சு..? டிக்கிதான் உடம்பு சரியில்லாம செத்துப் போச்சுன்னு கேள்விப்பட்டேன். அதை இங்க போட்டு புதைச்சுருக்காங்க போல இருக்குது. நீ அதை கவனிக்காம ஞானவேல் அப்படி இப்படின்னு உளர்றயா?"



-பெரியவர் கேட்கும்போதே மார்த்தாண்டனும் அங்கே வந்து கர்ச்சீப்பால் மூக்கை மூடிக்கொண்டு அந்த குழியைப் பார்த்தான்.

"நீ எங்கடா இங்க வந்தே...?" -பெரியவர் அவனைப் பார்த்து கத்தத் தொடங்கினார்.

"இல்லப்பா... நீங்களும் வேணுவும் தோட்டத்துப் பக்கம் வேகமா போறதைப் பார்த்து என்னவோ ஏதோன்னு வந்தேன்பா..."

"போ முதல்ல... வேணு குழியை மூடு... மூடிட்டு என்னை வந்து பார்..."

-பெரியவர் சொன்ன கையோடு மார்த்தாண்டனை கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு திரும்பி நடந்தார்.

வேணுவுக்கு நிஜமாலுமே மயக்கம் வந்தது!

ஆபீஸ் அறைக்கு முன்னால் பெரிய ரிசப்ஷன் ஹால்! அங்கே நிறையபேர் பொன்னம்பலத்துக்காக காத்துக் கொண்டிருந்தார்கள்.

அதில் பாதிப் பேருக்கு மேல் நன்கொடை வாங்க வந்தவர்கள். ஊரில் எந்த கோவிலில் ஏதாவது ஒரு விசேஷம் என்றாலும் பொன்னம்பலத்திடம் ஆயிரத்தி ஒரு ரூபாய் உறுதி.

அதே போலத்தான் அரசியல்வாதிகளும்... கட்சி வித்தியாசம் பாராமல் எலக்ஷன் செலவிலிருந்து எல்லாவற்றுக்கும் வாரிவிடுவார்.

தன் வரையில் பகைவன் என்றோ, பிடிக்காதவன் என்றோ யாரும் இருந்து விடக்கூடாது என்பது பொன்னம்பலத்தின் ஆசை. இந்தமுறை மார்த்தாண்டனையும் அருகிலேயே உட்கார்த்தி வைத்துக் கொண்டார். வந்தவர்களை வரிசையாக சந்தித்து செக்புக்கில் இருந்து செக் ஸ்லிப்புகளை கிழித்து

வரிசையாக எல்லோருக்கும் கொடுத்து அவர்களை அனுப் விட்டு மார்த்தாண்டன் பக்கம் திரும்பினார்.

"இப்படி வர்ற எல்லாருக்கும் வாரிக் கொடுத்தா எப் டிப்பா?" -அவனிடம் சிணுங்கல்.

"தர்மம் தான் தம்பி தலை காக்கும்..."

" 'தா'வுக்கு' தான்னு போட்டு சொன்ன வார்த்தைங்கள நம்பி சொத்தை அழிக்கப் போறீங்க..."

-அடுத்த நொடி மகனை ஆச்சரியமாகப் பார்த்தார் பொன்னம்பலம். 'சரியான பெட்கை... தொடை நடுங்கி... என்பவனா இப்படி புத்திசாலித்தனமாய் பேசுவது?"

"பரவால்லியே... புத்திசாலித்தனமா சொத்தை காப்பாத்திக்கணும்கற உணர்ச்சியோட பேசறியே...?"

"என்னப்பா... என்னை நீங்களும் மத்தவங்க நினைக்கற மாதிரியே நினைச்சுட்டீங்களா?"

"மத்தவங்கன்னா...?"

"நம்ம குடும்பத்தைத் தவிர எல்லாரும்தான்..."

"என்ன பேசிக்கறாங்க...?"

"உங்களுக்குத் தெரியாதாக்கும்... உங்களுக்குதான் நூறு கண்ணாச்சே."

"ஆயிரம் கண்ணுகூட இருக்கட்டும். என்ன பிரயோஜனம்? வாழ்க்கைல நிம்மதி இல்லையே?ஒரு பொட்டச்சி சாபத்தால ஒருத்திக்கு ஆறு பேர்ல இப்ப கல்யாணம் கார்த்தி இல்லாம தவிக்கறாங்க..."

"இதை நீங்களும் சாபம்னு நினைக்கறது தாம்ப்பா பெரிய கொடுமை..."

மார்த்தாண்டன் முதல் தடவையாக அவரிடம் துணிச்சலாக பேசினான்.



"டேய் தம்பி... நீ என்ன சொல்றே?"

"நான் இந்த சாபம்... பாவங்கறதையெல்லாம் நம்பத் தயாரா இல்லைப்பா."

"நீ அப்படித்தான் பேசுவே... காரணம் உன் வயசு அப்படி."

"இல்லப்பா... நீங்க என்ன சொன்னாலும் சரி. நான் கேட்க மாட்டேன். நாம நிம்மதியா இருக்கக்கூடாதுன்னு நினைக்கற யாரோதான் சதி பண்றாங்க."

"சதியா... இந்த அரிமா மாளிகைல- அதுவும் எனக்கு எதிராவா?"

"நிச்சயமா..."

"எதை வெச்சு தம்பி நீ இதை சொல்றே..? என்னைப் பாத்தாலே பத்தடி தள்ளி நின்னு கையகட்டிக்கற நிலைல தானே நானே இங்க எல்லாரையும் வெச்சிருக்கேன்."

"அப்படி கையைக் கட்டிகிட்டு நிக்கறவங்கள்ல தான் யாரோ நமக்கு எதிரா சதி பண்றாங்க..."

"பார்ரா... உனக்கு இன்னும் பால்குடியே மறக்கலே... ஆனாலும் வெள்ளந்தி நீன்னு நினைச்சுகிட்டு இருந்தேன். நீயா இவ்வளவு தூரம் பேசறே?"

"ஆமாம்... ஞானவேல் என்கிட்ட எல்லா விஷயத்தையும் சொன்னான். அப்பாகிட்டையும் சொல்லுன்னேன். ஆனா அதுக்குள்ளார என்ன நடந்திச்சோ தெரியல அவன் ஊரை விட்டே ஓடிட்டான்..."

"அப்படி என்ன சொன்னான் ஞானவேல்?"

"நம்ப அத்தை புருஷங்க ஆறுபேரும் ஒண்ணா கொடைக்கானலுக்கு கார்ல வந்தப்போ கார் மலைப் பாதைல இருந்து பிரேக் பிடிக்காம பள்ளத்தாக்குல உருண்டு விழுந்திச்சுல்ல...?"

"அது எப்பவோ நடந்த ஒண்ணு... அதுக்கென்ன இப்போ?"

"அது ஆக்சிடென்ட் இல்லையாம். பிரேக் பிடிக்காம பண்ணின சதிவேலையாம்."

-மார்த்தாண்டனின் பதில் ஒரு இடிபோல பொன்னம்பலம் தலையில் விழுந்த மாதிரி இருந்தது.

"என்னவே சொல்றே...? ஞானவேலுக்கு எப்படி அது தெரியுமாம்?"

"நம்ம மாளிகைல இரண்டு பேர் பேசிகிட்டிருந்துருக் காங்க. அது அவன் காதுல விழுந்திருக்கு..."

"யார் அந்த இரண்டு பேர்?" -பரபரப்பானார் பொன்னம் பலம்.

"அது தெரியல... அவங்களைப் பாக்க நான் முயற்சி பண்ணுனேன்; ஓடிட்டாங்கன்னான்."

"குரலை வெச்சுக்கூடவா கண்டுபிடிக்க முடியலை...?"

"முடியலைன்னான். அது மட்டுமில்ல- நம்ம அக்காக் களுக்கு நீங்க ரகசியமாக கல்யாண ஏற்பாடு பண்றீங்களாம். கல்யாணத்தை பண்ணி ஆறு பேரையும் வெளிநாட்டுக்கு அனுப்ப திட்டம் போட்ருக்கீங்களாம். அப்படி நடந்துட்டா அந்த ஆறுபேரையும் எப்படியாவது காலி பண்ணிடணும் னும் பேசிகிட்டிருக்காங்க."

மார்த்தாண்டன் சொல்லி முடிக்க பொன்னம்பலம் நெஞ்சைக் கையில் பிடித்துக் கொள்ள சரியாக இருந்தது.

"அப்பா... என்ன ஆச்சு... நீங்க அப்படி எதாவது ஏற்பாடு செய்துருக்கீங்களா?"

-மார்த்தாண்டன் படபடப்போடு கேள்வி எழுப்பும் போது வேணு அங்கே வந்து சேர்ந்தான். அறை வாசலில் கையை கட்டிக் கொண்டு நின்றான்.



பொன்னம்பலமோ வெளிறிப் போயிருந்தார்.

அதுவே மார்த்தாண்டன் கேட்டதெல்லாம் உண்மைதான் என்று சொல்லாமல் சொன்னது.

"ஐயா..." -வேணுதான் கூப்பிட்டான்.

"கதவை அடைச்சிட்டு இப்படி வந்து உக்காரு..."

-பொன்னம்பலம் ஒருவித திணறலோடு சொன்னது அவனுக்கு ஆச்சரியமாகிப் போனது.

அவர் எதிரில் உட்காருவதா?

தயக்கம் தொடையில் நடுக்கம் காட்டிற்று.

கதவை சாத்திவிட்டு அவரை சற்று நெருங்கியவனாக நின்றான். உட்கார தைரியமில்லை என்கிற மாதிரி...

"உக்காரு வேணு..."

"பரவால்லீங்க... நிக்கறேன்."

"உக்காருய்யா..." -அவர் அதட்டினார்.

அவனும் எதிரில் கிடந்த நாற்காலியில் நுனி சீட்டில் உட்கார்ந்தான்.

"குழியை மூடிட்டியா?" -கேட்டார்.

"மூடிட்டேங்க..."

"அதுல நிஜமா ஞானவேல் பொணம்தான் இருந்துச்சா?"

"ஆமாங்க... என் கண்ணால பாத்தேன்."

-அந்த பதில் மார்த்தாண்டனையே ஒரு உலுக்கு உலுக் கியது.

"என்னப்பா சொல்றீங்க...? ஞானவேலு பொணம் அது இதுங்கறீங்களே..."

"ஆமாம் தம்பி... நீ சொல்றது... வேணு சொல்றது எல்லா
தையும் கூட்டிக் கழிச்சா எனக்கே தெரியாம இங்க பெரு
ஏதோ சதிவேலை நடக்கற மாதிரிதான் தெரியுது."

"என்ன வேணு... ஞானவேல் பொணத்தை பாத்திய
அப்படின்னா ஞானவேல் இப்ப உயிரோட இல்லையா?"

-மார்த்தாண்டனிடமும் பதட்டம் பொங்கியது.

"ஆமாங்க... அவரை நான் பொணமா நம்ம தோட்டத்
பூவரச மரக்குழியில நேத்து பாத்தேன். அந்தோணித
சந்தேகப்பட்டு குழியை தோண்டுனான். அப்பதான் பா
தோம். எனக்கு கையும் ஓடலை காலும் ஓடலை. நான் வீ
டுக்கு ஓடிட்டேன். அதேசமயம் அந்த பொணத்தை எனக்கு
காட்டுன அந்தோணியும் இப்ப உயிரோட இல்லை. பாம்
கடிச்சு செத்து போயிட்டதா சொல்றத நான் நம்பத் தயா
இல்லை.

ஞானவேல் பொணத்தை அவன் கண்டுபிடிச்சிட்டு
தெரிஞ்சுதான் யாரோ அவனை பாம்பைவிட்டு கொன்னு
ருக்காங்க...

என்னையும் கொன்னுடுவாங்கன்னு பயந்துதான் நான்
டாக்டர் எனக்கு ஊசிபோட வந்தப்போ வேண்டாம்னு கத்த
னேன்."

"உன்னைக் கொன்னுடுவாங்கன்னா... யாரு... யார் மேல
உனக்குச் சந்தேகம்?"

"ஆரம்பத்துல எனக்கு..." -வேணு தயங்கினான்.

"கமான்... யார் மேல உனக்கு சந்தேகம்? இப்ப நான் கூட
அப்பாகிட்ட இங்க யாரோ சதிவேலை பண்றாங்கன்னுதான்
சொல்லிகிட்டிருந்தேன்."

"நான் அய்யாவையே சந்தேகப்பட்டேன். அந்தோணி
என்கிட்ட அப்படித்தான் சொல்லியிருந்தான்."



"என்னது... என் அப்பா மேலேயே சந்தேகமா..? அந்தோணி சொன்னானா?"

"ஆமாங்க... இந்த மாளிகை, தோட்டம் எல்லாம் கோவில் சொத்தாம். அதை உங்க தாத்தா அபகரிச்சுட்டாராம். அப்படியே கோவில் பூசாரியையும் கொன்னுட்டாராம். அதனால பூசாரி பொண்டாட்டி சாபம் விட்டாங்களாம். இந்த குடும்பத்துல யாருக்கு கல்யாணம் ஆனாலும் அவங்க விதவை ஆயிடுவாங்கன்னு... அதனாலதான் உங்க அக்காக்களுக்கு கல்யாணம் பண்ணாம அய்யா வெச்சுருக்காராம். அதையும் மீறி அவங்களை கன்னி கழிக்க யாராவது முயற்சி செய்தா அது அய்யாவை பாதிச்சு அய்யாவும் செத்துடுவாராம். அதனாலதான் நம்ம அக்காமாருங்களோட யாரையும் பேசக்கூட விட்றதில்லையாம் ஐயா. மீறி யாராவது பேசினா அவங்கள அடிச்சு துவைச்சிட் றாராம்... சிலரை கொலை கூட செய்துட்றாங்களாம்..."

-வேணு விவரிக்க விவரிக்க மார்த்தாண்டனுக்கு முகமே சிவந்து போயிற்று. குங்குமத்தை கரைத்து பூசின மாதிரி ஆகி விட்டது.

"அது சரி... பூவரச மரக்குழியில ஞானவேல் பிணம் இருக்கிறது அந்தோணிக்கு எப்படி தெரியும்?"

"மேனேஜர்தான் அந்த குழியை சந்தேகப்படும்படியா பார்த்துட்டு போனார். அதோட எங்கேயும் எதையும் தோண்டாதேன்னு சொன்னது அந்தோணிக்கு சந்தேகத்தை தந்துச்சு. அதான் தோண்டிப் பார்த்தான்."

"அப்ப அந்த மேனேஜர் நாகசாமிக்கு அந்த குழியில ஞானவேல் பொணம் இருக்கறது தெரிஞ்சிருக்கு. அவன்தான் ஏதோ பண்ணியிருக்கணும்."

-மார்த்தாண்டனின் முடிவுக்கு ஒத்துப்போவதுபோல பொன்னம்பலமும் வாயைத் திறந்தார்.

“ஆமாம் தம்பி... நான் நம்ம ஆறு பொண்களுக்கும் ஆ மாப்பிள்ளை பார்த்து முகூர்த்தம் கூட குறிச்சிட்டேன். ஆ பேருமே மும்பைல நம்ம டயர் கம்பெனியில் வேலை பா வங்க. நல்லா படிச்ச பசங்க. நான் சொன்னா கிணத்துல குதிப்பாங்க.

அப்படிப்பட்டவங்க. அதுக்கு முந்தி சதுரகிரிமலை இருந்து ஒரு சித்தரை வரவழைச்சு பரிகார பூஜையெல்லா பண்ணத் திட்டம் போட்டுருந்தேன். அந்தோணி சாவு அ தள்ளிப் போட்ருச்சு.

இப்பதான் தெரியுது... ஞானவேல் இடையில என்கி பேசினா நான் துணிச்சலா கல்யாணம் பண்றதோட கொ காரப் பாவிங்க யாருன்னும் தேட ஆரம்பிச்சுடுவேன் இல் அதான் அவனைக் கொன்னு புதைச்சுட்டாங்க. உண்மை தெரிஞ்சுகிட்ட அந்தோணியையும் பாம்பைவிட்டு கொன்னு டாங்க. வேணு மட்டும் எப்படியோ தப்பி இந்த நிமிஷ உயிரோட இருக்கான்...”

-பொன்னம்பலம் மிரட்டினார். வேணுவுக்கு உயிர்க் கூச்ச எடுத்தது.

மார்த்தாண்டன் எழுந்து நின்று,

“அந்த நாகசாமி எங்கன்னு முதல்ல பாக்கறேன். வேணுவை நீங்க வீட்டுக்கே போய் பார்த்தது தெரிஞ்சு அவன் சுதாரி சாலும் சுதாரிச்சிருக்கலாம்...”

-மார்த்தாண்டன் வெளியேறக் கால் எடுத்தபோது திபுதி வென்று சிலர் ஓடிவந்து நாகசாமி மகிழ மரத்தில் பிணமா தொங்குவதாகக் கூறினர்.

பொன்னம்பலத்துக்கு விதிர்த்துவிட்டது.

ஓடிப்போய் பார்த்தபோது நாகசாமி மரக்கிளையில் ஒரு கயிறு ஒன்றால் முடிந்து போயிருந்தார்!



# 7

“உலகில் எவ்வளவோ இன்ப துன்பங்கள்!

இதில் மனிதன் இன்பம் அடைவதுதான் பிறப்பின் நோக்கம் என்று கருதியே அதற்காகவே அனைத்தும் செய்கிறான். இருந்தும் துன்பங்களை அவனால் தவிர்க்க முடியவில்லை. அப்படி அவன் அனுபவிக்கும் துன்பங்களில் சரிபாதிக்கு மேல் அவனே அவனுக்கு வரவழைத்துக் கொண்டவை என்றால் நம்பமுடியுமா?

ஆனால் ஒவ்வொரு மனிதனைப் பொறுத்த வரையிலும் அதுதான் உண்மையாக இருக்கிறது.”

அரிமா மாளிகையே அரண்டு போயிருந்தது!

எம்.எல்.ஏ., எம்.பி.க்களிடம் இருந்தெல்லாம் போன் போட்டு விசாரிப்புகள்.

பத்திரிகைக்காரர்களும் குவிந்திருந்தார்கள்.

ஒரே நாளில் இரண்டு பேர் அரிமா மாளிகையில் இறந்து போயிருக்கிறார்கள்.

அந்தோணிக்கு பாம்பு என்றால் நாகசாமிக்கு மரக்கிளை.

பத்திரிகைக்காரர்களிடம் பொன்னம்பலம் பேசிக் கொண்டிருந்தார். அருகிலேயே மார்த்தாண்டனும் வேணுவும் கூட இருந்தார்கள்.

“என்னை இந்த நாகசாமி பெரிய முட்டாளாக்கிட்டான். சாபம்கற பேர்ல ஒரு முப்பது நாப்பது வருஷமா என்னை கட்டி வெச்சுட்டான். அவனை நான் எங்க குடும்பத்துல ஒருத்தனா நினைச்சுகிட்டிருந்தேன். ஆனா அவன்தான் எல்லா தப்புக்கும் காரணமா இருந்திருக்கான்னு இப்ப தெரியுது...”

“அப்ப உங்க குடும்பத்தை ஏதோ ஒரு வகைல பழி வாங்கத் தான் அவர் இவ்வளவு நாளா இங்க வேலை பார்த்துருக் காரா?”

-ஒரு பத்திரிகையாளர் கேள்வியை ஆரம்பித்தார்.

“ஆமாம்... அதுல எனக்கு சந்தேகமே இல்லை.”

“அது எப்படி ஒரு சாதாரண தனி மனிதர் சொஸைட்டில எல்லா வகைலயும் பலசாலியான உங்களை இவ்வளவு நாள் ஏமாத்தியிருக்க முடியும்?”

“ஏமாத்தியிருக்கானே... எப்படின்னா... என்னத்த சொல் றது? யானைக்கும் அடி சறுக்கும்னு எடுத்துக்க வேண்டி யதுதான்.”

“அப்படின்னா உங்க மகளுங்களுக்கு நீங்க கல்யாணம் பண்ணி வெச்சு இனி அவங்க சந்தோஷமா வாழ வழி பண்ணுவீங்கன்னு சொல்லுங்க...?”

“சாபம் பத்தின பயம் இருந்தப்ப கூட நான் முயற்சி செய்து கிட்டுதானே இருந்தேன். என் ஆறு பெண்களுக்கும் ஆறு மாப்பிள்ளைகளை நான் பார்த்து கிட்டதட்ட ஆறு மாசத்துக் கும் மேலாச்சு.”

“நாகசாமிக்கு அப்படி என்ன உங்க மேல கோபம்?”

“இதுக்கு பதிலை அந்த செத்துப்போன நாகசாமிதான் வந்து சொல்லணும். என்னைக் கேட்டா கோபம்லாம் இருக்க வாய்ப் பில்லை. சாபத்தை காரணமாவெச்சு எங்களை ஆட்டிவைக்க ஆசைப்பட்டிருக்கலாம்...”

“இந்த சாபம் எப்படி ஏற்பட்டது?”

“என்னோட அக்காக்களோட ஆறு புருஷங்க ஒரே நாள்ல ஒரு கார் விபத்துல செத்துப் போனாங்க. அதுக்குப் பிறகுதான் சாபம்னே ஒண்ணு இருக்கறது தெரியவந்துச்சு. நாகசாமி தன்



சதிவேலையை என் மாப்பிள்ளைகளை கொன்னதுல இருந்தே தொடங்கிட்டான்னுதான் சொல்லணும்.”

“அப்ப சாபம்கறதுகூட நாகசாமியால உருவாக்கப்பட்டது தானா?”

“நிச்சயமா... அதெல்லாம் இப்பதான் என் கவனத்துக்கு வந்துருக்கு. அதுக்கு தம்பி வேணுவும் ஒரு காரணம்.”

-பொன்னம்பலம் வேணுவை நோக்கி கையை நீட்டினார்.

வேணுவுக்கு தான் எப்படி காரணம் என்பது புரியவில்லை. முழித்தான்.

“வேணு எப்படி காரணம்... விளக்கமா சொல்ல முடியுமா?”

“வேணு... நீயே சொல்லு- கேக்கறாங்கல்ல...?”

-பொன்னம்பலம் வேணுவைத் தூண்டினார்.

“நான்... நான்...”

“சும்மா சொல்லு. அந்தோணி உன்கிட்ட பேசுனது... குழியில ஞானவேல் பொணத்தை பார்த்தது... ஞானவேல் பொணம் குழியில இருக்கறத நாகசாமி சந்தேகத்தோட கவனிச்சுட்டு போனதுன்னு எவ்வளவு இருக்கு...?”

“ நான் வழக்கமாக வேலைக்கு வந்தேங்க. மேனேஜர் அய்யா சந்தேகப்படும்படி நடந்துகிட்டதுலதாங்க வினையே ஆரம்பமாச்சு. அதைக் கண்டுபிடிச்ச அந்தோணியை பாம்பை விட்டு கொன்னுட்டாரு. நான் உடம்பு சரியில்லேன்னு வீட்டுக்கு போனதால தப்பிச்சேங்க...”

-வேணு மென்று விழுங்கி தனக்குத் தெரிந்ததை சொல்லி முடித்தான்.

“ஞானவேல் பொணத்தை குழியில பாத்தேன்னு சொன்னீங்களே... அப்ப ஞானவேலை கொன்னது மேனேஜர் நாகசாமியா?”

"அது எனக்கு தெரியாது... ஆனா பொணத்தை நா அந்தோணியும் குழியில பார்த்தோம். அப்புறமா அய்யாவோ போய் தோண்டிப் பார்த்தாக்க அங்க ஒரு நாயோட பிணம் இருந்தது. நான்தான் தப்பா உளறிட்டேன்னு எல்லாரு நினைக்கணும்னு நாகசாமியே பொணத்தை அப்புறப்ப திட்டு ஒரு நாயோட பொணத்தை போட்டு புதைச்சிரு கலாம்கறது என் அபிப்ராயம்."

"அப்ப ஞானவேல் பொணம் எங்கதான் போச்சு?"

"எங்கையும் போகலை... போலீஸ் நாய் வந்து மோப்ப பிடிச்சே கண்டுபிடிச்சிடுச்சு. அதை எங்க தோட்டத்து எரு குழியில போட்டு புதைச்சு மேல இலை தழையை போட் மறைச்சிருக்கான் நாகசாமி. பாவம் ரொம்ப நல்ல பைய நாகசாமி ஆளுங்க ரகசியமா பேசுனதை ஒட்டுக் கேட் போய் அவனுக்கு இந்த கதி ஆயிடிச்சு."

-இந்த பதிலை மார்த்தாண்டன் சொல்லி முடித்தான் அப்படியே குடும்ப சாபம் தன்னையும் விடாது என்ற பயத்தில் ஒரு பெண் பிள்ளைபோல மனதளவில் கோழையாக வாழ் ததை நினைத்தால் மிகவும் வெட்கமாக இருக்கிறது என்று கூறிவிட்டு பொன்னம்பலத்தைப் பார்த்தான்.

பொன்னம்பலம் பத்திரிகைக்காரர்களைப் பார்த்து பெரிதாக கை கூப்பினார்.

"இதுக்கு மேல நீங்க கேள்வி கேட்கவோ நான் பதில் சொல்லவோ எதுவும் இல்லைன்னு நினைக்கறேன். தொழில்ல நான் சக்ரவர்த்தியா இருந்தாலும் குடும்பத்துல அப்படி இவ்வளவு நாளா இல்லாம போய்ட்டேன்.

பெரிய குடும்பங்கன்னாலே அந்த குடும்பங்களைப் பத்தி நம்ப முடியாதபடி ஏதாவது ஒரு வதந்தி எப்பவும் பேசப் பட்டுகிட்டு இருக்கும்.



அதுக்கு உசுரும் இருக்காது. அதே சமயம் அது செத்த சவ மாவும் இருக்காது. இந்த நாட்டுல இதை பெரிய குடும்பங்க கொடுக்கற விலைன்னுதான் சொல்லணும்.

நானும் இவ்வளவு நாளா ஒரு விலை கொடுத்துட்டேன்னு தான் சொல்லணும். யார் செஞ்சு புண்ணியமோ... இல்ல நான் செஞ்ச தர்மமோ அதெல்லாம் ஒண்ணுமில்லைன்னு பண் ணிடிச்சு.

இதை எல்லாம் ரொம்ப விலாவரியா எழுதி என்னை சங்கடப்படுத்திடாதீங்க.

என் பொண்ணுங்க கல்யாணத்துக்கு உங்களை எல்லாம் கூப்புடுவேன். வந்து வாழ்த்திட்டு சாப்ட்டுட்டு போங்க.

இனி இந்த அரிமா மாளிகைல தப்பா ஒரு சின்ன விஷயம் கூட நடக்காது. அந்த அளவுக்கு எச்சரிக்கையா இருக்கப் போறேன்.

மேனேஜர் நாகசாமி ஆளுங்க யாரும் உள்ற இருந்தா அவங்களைக்கூட நான் பெரிசா தண்டிக்கப் போறதில்ல. திருந்தி இங்கையே வேலை பார்க்கலாம்.

ஏன்னா தண்டிக்கறதவிட மன்னிக்கறது பெரிசு இல்லீங் களா?"

-பொன்னம்பலத்தின் வியாக்யானம் பல பத்திரிகையாளர் களை கைதட்ட வைத்தது. வேணுவுக்கு எல்லாமே கனவில் நடக்கிற மாதிரிதான் இருந்தது.

மார்த்தாண்டனிடமும் ஒரு புதுப் பொலிவு.

ரகசியமாக வேணுவின் காதில்

"என்ன மச்சினரே... இப்ப உன் மனசுக்கு ரொம்ப சந் தோஷமா இருக்குமே" என்றான்.

வேணுவுக்கு ஜிலீர் என்றானது.

"மச்சினனா...? நானா?"

"ஆமாம்... உன் தங்கைகிட்ட போய் கேள். நான் யார்னு சொல்லுவா."

-மார்த்தாண்டன் பதிலோடு படு உற்சாகமாக நழுவினான். போனவன் திரும்பி வந்து "இன்னொரு முக்கிய விஷயம்..." என்றான்.

வேணுவுக்குள் திரும்பவும் ஜிலீர்!

"என் அக்கா வளர்மதி உன்கிட்ட தப்பா நடந்துக்க முயற்சி செய்ததை மறந்து மன்னிச்சிடு. அவங்களுக்கு கல்யாணமானா எல்லாம் சரியாயிடும் இல்லையா?"

-மார்த்தாண்டன் அந்த பதிலோடு நழுவ வேணுவுக்கு எல்லாமே வியப்பாக இருந்தது.

உண்மையில் உடம்பெல்லாம் கண்கள் இருப்பதாக பொன்னம்பலம் சொல்லிக் கொண்டிருப்பதுகூட மெய் இல்லை.

மார்த்தாண்டனுக்குத்தான் உடம்பெல்லாம் கண்கள் என்று தோன்றியது!

## 8

"இந்த உலகில் எல்லோரையும் ஏமாற்றி விடலாம். ஆண்டியிலிருந்து அரசன் வரை திட்டம் போட்டு ஏமாற்றி தன்னைப்போல் ஒரு உத்தமன் உலகில் கிடையாது என்றோ இல்லை தன்னைப் போல ஒரு புத்திசாலி உலகில் கிடையாது என்றோ நம்ப வைத்து விடலாம்.

ஆனால் ஒருவனை மட்டும் ஏமாற்றவோ நம்ப வைக்கவோ ஒரு மயிர்க்கால் அளவு கூட முடியாது. அந்த ஒருவன் இறைவன் என்றும் எண்ணிவிட வேண்டாம். முயன்றால் இறைவனைக் கூட ஏமாற்றிவிட வாய்ப்பு உண்டு.

ஆனால் ஒருவனிடம் மட்டும் அவனால் ஒன்றுமே செய்ய முடியாது...

அந்த ஒருவன்...?

வேறு யார்... ஏமாற்ற முனைந்த அவனேதான்!"



அம்மா அஞ்சுகம் வேணுவுக்கு திருஷ்டி சுற்றிப் போட்டுக் கொண்டிருந்தாள்.

தங்கை ரேணுகா எப்போதும் இல்லாத மகிழ்ச்சியோடு அதைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அம்மா விலகவும் வேணுவின் பார்வை ரேணுகாவிடம் தான் ஊன்றியது.

"என்னைவிட நீ ரொம்ப சந்தோஷமா இருக்கேபோல தெரியுதே?" -கேட்டான்.

அவள் கழுத்துச் சங்கிலியை வாயில் மென்றபடி ஆமோதித்தாள்.

"பெரியவர் குடும்பம் சந்தோஷப்படணும். நீயும் நானும் சந்தோஷப்பட்டறதுல என்ன வந்துடப் போகுது?"

-வேணு ஆழம் பார்க்கத் தொடங்கிவிட்டான்.

"அது வந்துண்ணே..." -அவள் சங்கிலியோடு வெட்கம் கலந்து வார்த்தையையும் மென்றாள்.

"எது வந்து...?"

"அவர் உங்ககிட்ட எதுவும் சொல்லலியா?"

"எவர்?"

"அதான் உங்க சின்ன முதலாளி...?"

"ரொம்ப நன்றி வேணுன்னு சொன்னாரு. அநேகமா இந்த மாசம் சம்பளத்துல ஒரு ஆயிரம் ஐநூறு கூடுதலா வரலாம். இதுக்கு மேல அவர் சொல்ல என்ன இருக்கு?"

"இல்லண்ணே... இனிமே உனக்கு சம்பளமே தர மாட்டாங்க பார்..."

"ஏன்... வீட்டுக்கு அனுப்பி விடுவாங்களா?"

"இல்லண்ணே... அவரே சொல்லுவார் பார்..."

"சொன்னாரே..."

-ரேணுகா தன் வண்டு விழிகளுக்கு மேல் உள்ள புருவத்தில் ஒரு வளைசலோடு அவனைப் பார்த்தாள்.

"நான் மச்சினனாம்!"

-அடுத்த நொடி ரேணுகா முகம் குங்குமக் கரைசலை பூசிக்கொண்டது போல சிவந்து போயிற்று.

"இதை என் சின்ன முதலாளி சொல்றதுக்கு முந்தியே நான் கண்டுபிடிச்சிட்டேன்..."

-ரேணுகா எப்படி என்கிற மாதிரி பார்த்தாள்.வேணு போய் அவள் ரிக்கார்ட் நோட்டை எடுத்து வந்தான். அதில் அடங்கியிருந்த கடிதத்தை எடுத்து விரித்தான்.

"அண்ணே..."

"நொண்ணே... காலேஜிக்கு படிக்கப் போனியா இல்ல காதலிக்கவா...?"

-வேணு குரலில் கணிசமான அளவு நிஜமான கோபம்.

"சத்தியமா நான் படிக்கத்தான் போனேன். அவர்தான் என்னை சுத்திச் சுத்தி வந்தாரு..."

"உன் காலேஜ் வேற... அவர் காலேஜ் வேற... அப்படி இருக்க எப்படி?"



"இன்டர் காலேஜ் ஃபங்ஷன் ஒண்ணுக்கு வந்துருந்தப்போ சந்திச்சாரு. சத்தியமா நான் உன் தங்கைன்னு அப்ப அவருக்கு தெரியாது. எனக்கும் அவர் பெரியவர் மகன்கறது தெரியாது..."

"அப்ப தெய்வீகக் காதல்னு சொல்லு..."

"இல்லண்ணே... அவர் பெரியவர் மகன்னு தெரியவும் நான் அவர்கூட பேசவே பயந்தேன். சினிமாவுலதான் பணக்காரன் ஏழை காதல்லாம் சாத்தியமாகும். நீங்க இமயமலைன்னா நாங்க குப்பைமேடுன்னு சொல்லி அவரை விட்டு ஒதுங்கினேன்."

"அப்பவும் அவர் விடலையாக்கும்?"

"ஆமாம். ஆனா தன் ரத்தத்துலையே ஒரு நாள் லெட்டர் எழுதி நான் மட்டும் காதலிக்க மறுத்தா செத்துடுவேன்னு சொல்லியிருந்தார்..."

-ரேணுகா சொன்னதோடு நில்லாமல் மேஜை டிராயரைத் திறந்து கொத்தாக ஒரு கடித மூட்டையையே வெளியே எடுத்தாள். வேணுவுக்கு தூக்கி வாரிப்போட்டது. கத்தை கத்தையாக கடிதங்கள். அதில் ஒரு கடிதம் நிஜமாலுமே ரத்தம் தோய்ந்து அவனை மிரட்டியது.

"இவ்வளவு லெட்டர் வந்துருக்குன்னா பல வருஷமா காதலிக்கிறீங்களோ?"

"இல்லண்ணே ஒரு ஒண்ரை வருஷமாதான்... அதுல ஆறுமாசமாதான் ரொம்ப தீவிரமா..."

"ஆமா... பாக்க பெண் பிள்ளையாட்டம் வெட்கப் பட்டு கிட்டு கூனிக்குறுகிக்கிட்டிருக்கற என் சின்ன முதலாளியை உன்னால எப்படி காதலிக்க முடிஞ்சுச்சு?"

"உருவத்தை மட்டும் பார்த்திருந்தா முடியாதுதான். ஆனா அவர் பேசப் பேசத்தான் அவர் மனசு தெரிஞ்சிச்சு. ஒரு நாள்

‘இவ்வளவு பேசற நீங்க ஏன் இப்படி அலி மாதிரி நடந்துகறீங்க’ன்னு கூட கேட்டுட்டேன்.”

“அப்பதான் அவர் ஒரு உண்மையைச் சொன்னாரு..”

“என்ன?”

“அவரை அப்படியே பெரியவர் வளத்துட்டாராம். காலேஜிக்கெல்லாம் வரவும்தான் ஒரு ஆம்பிளை எப்படி இருப்பான்னு தெரிய வந்துச்சாம்.”

“நம்பற மாதிரி இல்லையே இந்த பதில்...”

“என்னண்ணே சொல்றே... அவர் என்கிட்ட எதையுமே மறைக்கல. அவர் குடும்பத்து சாபம்... அத்தைங்க தாலி அறுத்த விஷயம்... பெரியவர் அவங்க அக்காக்களுக்கு கல்யாணம் பண்ணாம வெச்சிருக்கறதுன்னு எல்லாத்தையும் சொன்னார்.”

“சரி எந்த நம்பிக்கைல நீ அவ்வளவையும் கேட்டுட்டு காதலிச்சே...?”

“நான் எங்க காதலிச்சேன்... அநாவசியமா ஆசையை வளர்த்துக்காதீங்க. உங்க காசு பணத்துக்கு கோடீஸ்வரங்க வீட்ல சம்மந்தம் பண்றதுதான் சரி. உங்க அக்காக்களுக்கு வேணும்னா சாபம்னு சொல்லிக் கல்யாணம் ஆகாம இருக்கும். உங்களுக்குத்தான் ஒரு பிரச்னையும் இல்லையேன்னு சொன்னேன். அதைக் கேட்டுட்டு அவர் அழுதுட்டார் அண்ணே...”

“அப்ப அழுது உன் சம்மதத்தை வாங்கிட்டார்னு சொல்லு.”

-ரேணுகாவிடம் மௌனம்.

“சரி... நம்ம குடும்பத்துல நானோ அம்மாவோ மறுத்தா என்ன செய்திருப்பே...?”

-அவளிடம் மௌனத்தின் தொடர்ச்சி...கால் நகங்களால் தரையில் கோலம்.



“கேக்கறேன்ல...?”

“தெரியலண்ணே... ஆனா அவர் நம்பிக்கை தந்தார். உன்னைக் கைவிடமாட்டேன். இந்த ஜென்மத்துல நீதான் என் பெண்டாட்டின்னும் சொன்னாரு...”

“நீயும் உருகிப் போய்ட்டே...”

“எல்லாம்தான் இப்ப சரியாயிடிச்சுல்லே... எதுக்குண்ணே இப்படி வளைச்சு வளைச்சு கேக்கறே?”

“பைத்தியக்காரி... நானும் அம்மாவும் சம்மதிச்சுட்டா ஆயிடிச்சா... பெரியவர் என்ன சொல்வார்னு யோசிச்சு பார்த்தியா?”

“அவர்கிட்டேயும் சம்மதம் வாங்கிடுவேன்னாரு. பெரியவர் பொண்டாட்டி... அதாவது அவரோட அம்மாவும் ஒண்ணும் பெரிய குடும்பம் இல்லையாமே... பெரியவரே காதலிச்சுதான் கல்யாணம் செய்துகிட்டாராமே...?”

-வேணுவுக்கு சுரீர் என்றது. இது அவனே இதுவரை கேள்விப்பட்டிராத ஒரு உண்மை.

“இதையும் அவர்தான் சொன்னாரா?”

“ஆமாண்ணே... எங்கப்பாவே ஒரு ஏழைப் பொண்ணைதான் கல்யாணம் செய்துகிட்டாரு. அதனால என் காதலுக்கு எங்க அப்பா எந்த எதிர்ப்பும் காட்ட மாட்டாருன்னு சொன்னாரு...”

“அங்க வேலை பாக்கற எனக்கே தெரியாத விஷயங்க உனக்கு தெரிஞ்சிருக்கு. பரவால்ல...”

-வேணு ஈடுபாடே இல்லாமல்தான் பேசினான்.

“திரும்பவும் கேட்கறேன்... இப்பதான் எல்லாம் சரி ஆயிடிச்சே. எதுக்கு கவலைப்பட்டறே?”

"இல்ல ரேணுகா. ஒட்டுமொத்தமா மேனேஜர் நாகசாமி மேல பழியைப் போட்டு அவர்தான் சதி செய்ததா சொல்லி ஒரு மாதிரி முடிவு பண்ணிட்டாங்க. ஆனா நாகசாமியோட நான் நல்லா பழகினவன். அவரை ஒரு சதிகாரனா என்னால கற்பனை செய்துகூட பார்க்க முடியலை..."

-வேணு மெல்ல தன் சந்தேகத்தின் ஒரு நுனியை ரேணுகாவிடம் வெளிக்காட்டினான்.

"பெரிய எமகாதக வேலை செய்யறவங்க நெத்தியில் எழுதி வெச்சுகிட்டா செய்வாங்க... என்னண்ணே நீ?"

-ரேணுகா தான் மிக நம்புவது போல பேசினாள்.

"சரி.. போய் வேலையைப் பார்..."

-அவனும் அதற்குமேல் பேச விரும்பாதபடி கத்தரித்தான்.

"அம்மாகிட்ட..."

-அவள் இழுத்தாள்.

"நான் சொல்லிக்கறேன். ,அவசரப்பட்டுடாதே."

"அவர்கிட்ட..."

"அண்ணன்கிட்ட பேசிட்டேன்னு மட்டும் சொல்."

-வேணு ஒரு முற்றுப்புள்ளி வைத்தான்!

## 9

**"யா**ருக்கும் விரோதி வெளியே இல்லை!''

**அ**ரிமா மாளிகை!

கிரவுண்டில் பொன்னம்பலம் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தார்.



அவரது பெண்கள் மாடியில் இருந்து கொண்டு ரகசியமாகவெல்லாம் அதைப் பார்க்கவில்லை. அவர்களும் கிரவுண்டுக்கு வந்து அப்பா விளையாடுவதைப் பார்த்துக் கொண்டும் அவர்கள் காலடிக்கே வரும் பந்துகளை தூக்கிப் போட்டுக் கொண்டும் படு உற்சாகமாக இருந்தார்கள்.

வேணு அவனது ஆதிகாலத்து மொபெட்டுடன் நுழைந்து மகிழ மரத்தடியில் அதை ஸ்டாண்ட் போட்டு நிறுத்திவிட்டு மாளிகைக்குள் நுழைந்தபோது பழைய அந்த இறுக்கமே எங்கும் இல்லை.

மேனேஜராய் பெரியசாமி உருமாறியிருந்தான்.

வேணு வரவும் பெருமிதத்தோடு சிரித்தான்.

"வேணு... ஒரு நிமிஷம் ஆபீசுக்கு வந்துட்டுப்போ..."

-என்றான்.

"இரு பெரியசாமி. யூனிஃபார்மை மாட்டிகிட்டு வந்துட்றேன்.."

"அவசியமில்ல... நீ இனி யூனிஃபார்ம் போட வேண்டாம்னு சின்னவர் சொல்லச் சொன்னார்..."

"அப்படியா... ஏனாம்?"

"வாயேன் சொல்றேன்..."

-பெரியசாமி அந்த கல் மாளிகையில் ஆபீஸ் என்று ஒரு பிளேட்டில் எழுதப்பட்டிருந்த நாகசாமியின் அறைக்குள் நுழைந்தான். உள்ளே மேஜை நாற்காலியில் இருந்து எல்லாமே மாறியிருந்தது.

"உட்காரு..."

"பரவால்ல சொல்லு..."

"முன்னெல்லாம் ஒரே டென்ஷனா இறுக்கமா இருக்கும். இப்ப அப்படி இல்லை கவனிச்சியா?"

"இதைச் சொல்லத்தான் கூப்ட்டியா?"

"என்னையே மேனேஜரா ஆக்கிட்டாரு சின்னவர். இந்த சாக்லேட்..."

-பெரியசாமி ஒரு சாக்லேட் டப்பாவை நீட்டினான்.

"இங்க கங்காணியைத்தானே இங்கிலீஷ்ல மேனேஜர்னு சொல்றாங்க. எப்படியோ நீ இந்த இடத்துக்கு வந்ததுக்கு என் வாழ்த்துக்கள். எனக்கு இன்னிக்கு எங்கையாவது வேலை இருக்குதா?"

"யூனிஃபார்மே போட வேண்டாம்னு சொல்லிட்டாரு சின்னவர். இன்னும் எலெக்ட்ரீஷியன் நினைப்புலையே கேள்விகேட்டா எப்படி...? வாஸ்தவத்துல உன்னைத்தான் மேனேஜரா போடுவாங்கன்னு நான் நினைச்சேன். ஆனா உனக்கு பெரிசா ஏதோ பொறுப்பு தரப்போறார்னு நினைக்கறேன்."

-பெரியசாமி மிக சகஜமாக பேசிக் கொண்டே போனான். ஆனால் வேணுவால் அவன்போல சகஜமாக, இயல்பாக- இறுக்கமில்லாமல் இருக்க முடியவில்லை.

அந்த அறையில் பெரியவர் படமும் அவர் மனைவி படமும் மாட்டப்பட்டிருந்தது. அதில் அவர் மனைவி படத்துக்கு மட்டும் மாலை.

கீழே தனபாக்கியம் என்கிற அவள் பெயர்.

வேணுவின் பார்வை அந்த படத்தின் மேல் சென்றது.

"என்ன புதுசா பாக்கற மாதிரி அம்மா படத்தை பாக்கறே?"

"ஆமாம்... இப்ப உயிரோட இருந்தா பொண்ணுங்களுக்கு கல்யாணம் ஆகப் போறதை நினைச்சு சந்தோஷப் படுவாங்கள்ல...?"

"என்ன பண்றது... அவங்களுக்கு கொடுத்து வைக்கல. போய்ச் சேர்ந்துட்டாங்க..."



"சரி... இப்ப எனக்கு என்ன வேலை... மேனேஜரா மிட்டே... சொல்லு."

"இப்பதானே சொன்னேன். நீ இனி எலெக்ட்ரீஷியன் கிடையாது. நம்ம அய்யாவோட டயர்ஃபேக்டரில இருந்து ஒரு எலெக்ட்ரீஷியன் தினமும் இங்க அவசியப்பட்டா வந்துட்டு போவானாம். உன் விஷயமா சின்னவர் நானே பேசிக்கறேன்னு சொல்லிட்டார்..."

"சின்னவர் இப்ப எங்க இருக்கார்?"

"அவர் ரூம்லதான் இருப்பார்னு நினைக்கறேன்..."

"சரி... போய் பார்க்கறேன்."

-வேணு விலகினான். சிறிது தூரம் வெளியில் சென்றவன் எதையோ கேட்க திரும்பினான். அதற்காக மீண்டும் அறை வாசலை அடைந்தபோது பெரியசாமி தொலைபேசியில் வேணுவுக்கு முதுகைக்காட்டியபடி பேசிக் கொண்டிருந்தான்.

"அய்யா வேணு வந்தாங்க... என்னன்னு தெரியல. ரொம்ப இறுக்கமா இருக்கான். தங்கச்சி காதல் விஷயம் தெரிஞ்சு இனி இந்த மாளிகைல நாம எலெக்ட்ரீஷியன் இல்லைன்னு நினைச்சுகிட்டு சந்தோஷமா வருவான்னு நினைச்சேன். ஆனா அவனோ எனக்கு என்ன வேலைன்னு கேக்கறான். நடந்து முடிஞ்ச விஷயங்களை சந்தேகப்பட்ற மாதிரி தெரியுதுங்க..."

-பெரியசாமி சொல்லிக் கொண்டிருந்த பதில் ஒரு விநாடி வேணுவின் விலாவுக்குள் ஒரு ஊசியை ஏற்றிய மாதிரி ஆக்கியது. சட்டென்று சுவரோடு சுவராக ஒடுங்கி நின்றான்.

-பெரியசாமியின் பேச்சு தொடர்ந்து கொண்டிருந்தது.

"நான் மேனேஜர் ஆனது பிடிக்கலையோ என்னவோங்க... ஆனா வாஸ்தவத்துல ரொம்ப சந்தோஷமா இருக்கணும். ஆனா அப்படி இல்லீங்க..."

"........"

"நாகசாமி சம்சாரம் கூட மடங்கிடிச்சுங்க. பணத்தை பார்த்ததும் அதுக்கு கையும் ஓடலை. காலும் ஓடலை. எந்த காலத்துலையும் யார் எதைக் கேட்டாலும் வாயைத் திறக்க மாட்டேன்னுடுச்சு. சிட்டிக்குள்ளார ஒரு வீடு மட்டும் கட்டாயம் வாங்கித் தந்துடணுமாம்."

"........"

"நல்லதுங்க... நல்லதுங்க... வெச்சுட்றேங்க!"

-பெரியசாமி ரிசீவரை வைக்கப் போனான். வேணு தன்னை அவன் பார்த்தால் ஆபத்து என்கிற மாதிரி சட்டென்று நகர்ந்தான்.

முகத்தில் பொட்டுப் பொட்டாக வியர்வை.

ஏற்கனவே மனதில் ஏகப்பட்ட குழப்பம்.

பெரியசாமியின் பேச்சு அதை பலமடங்கு பெருக்கி விட்டது.

'தான் சந்தேகப்படுவதில் இருந்து தன் தங்கை காதல் விஷயம் வரை தெரிந்து வைத்திருக்கிறான்...

அப்படியே நாகசாமி மனைவி மடங்கிவிட்டதாக சொன்னதும் பணத்தைப் பார்த்து அவள் கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை என்று சொன்னதும் எதற்காக...?'

வேணுவுக்குள் பூச்சிகள் பறந்தன!

நடையில் தேக்கம்.

காதில் கொலுசுச் சப்தத்தின் இடையீடு.

எதிரில் விளையாடிய களைப்போடு சகோதரிகள்.

அதில் பெரியவள் வளர்மதி மட்டும் அவனைத் தாண்டிச் செல்லும்போது ஒரு மாதிரி பார்த்தாள். அந்தப் பார்வையே 'என்னை அப்பாவிடம் காட்டிக் கொடுத்து விடாதே' என்று கெஞ்சுகிற மாதிரி கூட இருந்தது.



முகத்தை வேறுபக்கம் திருப்பிக் கொண்டான்.

மனசுக்குள் பெரியசாமியின் தொலைபேசிப் பேச்சு கொத்திக் கொண்டே இருந்தது.

'பெரியசாமி அப்படி யாரிடம் பேசியிருப்பான்?'

'பெரியவரிடமா?'

'அவர்தான் கிரவுண்டில் விளையாடிக் கொண்டிருக்கிறாரே...'

கேள்வியும் பதிலும் அவனுக்குள் முட்டும்போது பெரியவரே எதிரில் விளையாடி முடித்தவராக செல்போனை காதில் அணைத்தபடி வந்து கொண்டிருந்தார்.

சுரீர் என்றது.

செல்போன் உள்ளவர்களிடம்தான் கக்கூஸில் இருந்து கொண்டு கூட பேசலாமே... அப்படியானால் பெரியவர்...?

அவனுக்குள் அவர் ஒரு வில்லனாக மீசையை நீவி விட்டுக்கொள்ள, நிஜத்தில் அருகிலும் வந்துவிட்டார்.

வேணுவைப் பார்த்தபடியே போனை முடக்கியவர்.

"என்ன வேணு... என்ன இன்னும் யூனிஃபார்ம் போடாம இருக்கே?" -என்றார் சற்று எகிறலாக.

"போடணுங்க... அதுக்குத்தான் போய்கிட்டே இருக்கேன்."

"போ... போ... இனிமே நான் இந்த மாதிரி விஷயத்துல எல்லாம் ரொம்ப ஸ்ட்ரிக்டா இருக்கப் போறேன்." -என்றவாறே அவனைக் கடந்து சென்றார்.

வேணுவுக்கு நெஞ்சைக் கரித்தது.

'இதற்குப் பெயர் கண்டிப்பா... இல்லை நான் சந்தேகப் படுவது தெரிந்து எரிச்சலா?'

கேள்விகள் அம்புகளாய் பாய்ந்தன.

மார்த்தாண்டன் வரச் சொன்னதே மறந்துபோனது.

'நிச்சயம் பெரிய அளவில் ஏதோ சதிவேலை நடந்திருக்கிறது.

தான் நினைத்ததுபோல நாகசாமி நிச்சயம் சதி செய்யவில்லை.

செய்திருந்தால் அவன் மனைவிக்கு எதற்கு பணமும் வீடும்?

பெரியவர்தான் ஏதோ பெரிய சதிவேலையை செய்திருக்கிறார்... இந்த சதிகாரக் குடும்பத்தில் தன் தங்கை வாழ்க்கைப் பட்டால் என்னாகும்?'

-நினைக்கவே நெஞ்சு நடுங்கியது. இந்த வேலையே வேண்டாம் என்று ஓடிவிடத்தான் முதலில் தோன்றியது.

அதுதான் சரி என்றும் முடிவுக்கு வந்து திரும்பப் பார்த்தவனை 'வேணு...' என்கிற குரல் கூப்பிட்டு தடுத்தது. கூப்பிட்டது மார்த்தாண்டன்.

அறைக்கு வெளியே நின்றபடி கையை அசைத்து அவனிடம் வரும்படி சைகை வேறு...

வேணு அரை மனதாக மார்த்தாண்டனை நோக்கி நடந்தான்.

மார்த்தாண்டனும் அவன் அறைக்குள் நுழையவும் கதவைத் தாழிட்டான்.

வேணு தடுமாற்றத்துடன் பார்த்தான்.

"என்ன வேணு பாக்கறே... பெரியசாமியை பார்த்தியா?"

வேணு தலையை ஆட்டினான்.

"அவனை நான்தான் அப்பாகிட்ட சொல்லி மேனேஜர் ஆக்கினேன்... ஆமா வீட்ல ரேணுகா எல்லா விஷயமும் சொல்லியிருப்பாளே...?"

"ம்..."



"என்ன வேணு வாயைத் திறந்து உற்சாகமா பேச மாட்டேங்கறே...? உனக்கு எங்க காதல்ல உடன்பாடில்லியா?"

"நாங்க ஏழைங்க மட்டுமில்ல... ரொம்ப தாழ்ந்த சாதியும் கூட. அதான் யோசிக்க வேண்டியிருக்கு..."

"இப்ப அதுதான் உன் கவலையா?"

"கவலை இல்ல... அதுதானே எங்க மாற்றப்பட முடியாத நிலை."

"காதலுக்கு அதெல்லாம் கிடையாது வேணு. என் அம்மா கூட தாழ்ந்த சாதிதான்."

"இருக்கலாம்... அவங்க காதலைத் தடுக்க அவங்க குடும்பத்துல யாரும் இல்லையோ என்னவோ? ஆனா என் தங்கச்சிக்கு அப்படி இல்லை..."

"அதுதான் கிடையாது. அவங்க அப்பா எங்கம்மா காதலிச்சது பிடிக்காம தற்கொலையே செய்துகிட்டார் தெரியுமா..."

-வேணுவுக்குள் இதயம் ஒரு கரணம் அடித்தது.

"அப்படி இருந்தும் எங்கம்மா உறுதியோட எங்கப்பாவை கல்யாணம் செய்துகிட்டாங்க. என் அப்பாவும் எங்கம்மாவை கடைசிவரை கைவிடலை. இத்தனைக்கும் எங்க குடும்பத்துல என் அத்தைங்களும் தாத்தாவும் என் அப்பாவை பயங்கரமா எதிர்த்தாங்களாம். என் அப்பா அசறலை. என் அத்தைங்கள விட, அத்தைங்களோட கணவர்கள்தான் அந்தஸ்து, சாதி அது இதுன்னு என்னென்ன பேசினாங்க தெரியுமா?"

"அப்ப உங்கப்பா உங்க விஷயத்துல எதிர்ப்பு தெரிவிச்சா நீங்களும் உங்கப்பா மாதிரியே அவரை எதிர்த்துகிட்டு கல்யாணம் செய்துக்குவேன் சொல்லுங்க..."

"நிச்சயமா... ஆனா ஒரு விஷயம். அப்பா நிச்சயம் எதிர்க்க மாட்டார். எதைவெச்சு சொல்றேன்னா எங்க அக்காங்களுக்காக அவர் பாத்துருக்கற மாப்பிள்ளைகள் அவ்வளவு பேரும்

எங்கள மாதிரி பணக்காரங்க கிடையாது. மிடில் கிளாஸ்தான். ஆனா நல்லா படிச்சு எங்க டயர் கம்பெனியிலையே வேலையில இருக்கறவங்க.”

“இந்த கல்யாணத்துக்கு உங்க அக்காங்கள்ளாம் சம்பாதி பாங்களா?”

“அவங்களும் என் அத்தைங்க என் அப்பாகிட்ட நடந்து கிட்ட மாதிரி நடந்துப்பாங்கன்னு நினைக்கறியா...? நிச்சயமா கிடையாது. என் அத்தைங்களுக்கு காசுத் திமிரும், ஜாதி ஆணவமும் இருந்தது. அதைவிட என் தாத்தாகிட்ட திமிரும் ஆணவமும் இருந்தது. அதான் நாகசாமி மாதிரி ஒருத்தன் உள்ள நுழைஞ்சு பழி வாங்கினான். அது ஒரு வகைல அப்பாவுக்கும் நல்லதா போச்சு. ஆனா இப்ப அப்படி எல்லாம் எதிர்க்கத்தான் யாரும் இல்லையே...”

“நீங்க பேசறதைப் பார்த்தா நானும் எங்கம்மாவும் சம்மதிக்க லேன்னாலும் நீங்க விடமாட்டீங்கபோல தெரியுதே...”

“ஆமாம் வேணு... வேணும்னா உன் கால்ல கூட விழறேன். ரேணுகாவை என்கிட்ட இருந்து பிரிச்சுடாதே. நீயும் இந்த மாளிகைல ஒரு எலெக்ட்ரீஷியனா கஷ்டப்பட வேண்டாம். நல்லா சௌக்கியமா இருக்கலாம்.”

“இந்த அரிமா மாளிகைலயா?”

-வேணு கேட்ட விதமே ஒரு தினுசாக இருந்தது.

“ஆமாம்... ஏன் அப்படி கேட்கறே...?”

“ஒண்ணுமில்ல... ஒருவாரம் டயம் கொடுங்க. இப்ப இருக்கற அமைதியும் சந்தோஷமும் தொடர்ந்தா அப்ப நான் சரின்னு சொல்றேன்.”

“நாகசாமி மாதிரி இன்னும் யாராவது இருந்து எதாவது சதி வேலை பண்ணலாம்னு நினைக்கறியா?”



“நாகசாமியே அப்படி நடந்துப்பார்னு நான் எதிர்பார்க்க லையே...”

“யார்தான் எதிர்பார்த்தோம்...அதான் பலநாள் திருடன் ஒரு நாள் அகப்பட்ற மாதிரி அகப்பட்டு தூக்குலையும் தொங்கிட் டானே...?”

“இருக்கலாம்... எனக்கு ஒரு வாரம் டயம் கொடுங்க. இப்ப நான் கிளம்பறேன்.”

-வேணு மார்த்தாண்டனிடம் தொடர்ந்து பேசப்பிடிக்காமல் அங்கிருந்து புறப்பட்டான்.

மார்த்தாண்டனுக்கு முகம் சிறுத்துவிட்டது. அவன் திரும் பிச் செல்லும்போது மார்த்தாண்டன் சத்தம் போட்டு கத்திச் சொன்னான்.

“ஒருவாரம் இல்ல... ஒரு மாசம் கூட டயம் எடுத்துக்கோ. ஆனா நல்ல பதிலைச் சொல்லிடு!”

# 10

“பாவமும் நிழலும் ஒன்று... ஒளிபடப்பட
இரண்டும் பெரிதாகிக் கொண்டே போகும்!”

இன்ஸ்பெக்டர் ருத்ரா, வேணு சொன்னதைக் கேட்டு தீவிர சிந்தனையில் இருந்தார்.

அவன் அவரை அழகாக மடக்கிக் கட்டியிருந்தான்.

“நான் நம்பிக்கையே இல்லாமதான் உங்களைப் பார்க்க வந்துருக்கேன்.

அரிமா மாளிகை மர்மம் பற்றி எனக்கிருக்கற அவ்வளவு சந்தேகங்களையும் உங்க முன்னால விளக்கிட்டேன்.

நல்ல உண்மையான போலீஸ் அதிகாரியா இருந்தா நீங்க என் சந்தேகங்களுக்கு விடை தேடணும்.

இல்லேன்னா நான் இந்த பக்கம் கிளம்பிப்போன உடனே அந்தப் பக்கமா பெரியவருக்கு போன் பண்ணி என்னைப் பத்தியும் போட்டுவிட்டு அவர்கிட்ட நீங்க லட்சங்களை வாங்கிக்குவீங்கன்னுதான் நான் நினைக்கிறேன்.

அநேகமா ஞானவேல், பிளம்பர் சீனு, அந்தோணி, நாகசாமிங்கற வரிசைல என்னையும் கொலை செய்துட்டு பெரியவரும் தன் தர்பாரை தொடர்ந்து நடத்தலாம்..."

வேணு இப்படிப் பேசியதுதான் ருத்ராவை பொறியில் போட்டு பூட்டிவிட்டது.

"என்ன சார் சிந்தனை... என் சந்தேகங்கள் உங்களுக்கு சந்தேகமா படலையா?"

வேணு திரும்பவும் அவரைக் கிண்டினான்.

''மாளிகைல பெரியசாமி பேசினதைக் கேட்டுட்டு நீ சொன்னதை கூட்டிக் கழிச்சா எனக்கும் சந்தேகம் வரத்தான் செய்யுது. ஆனா நாகசாமில இருந்து எல்லாரையும் பெரியவர் ஏன் கொலை செய்யணும்? அவங்க அவருக்கு எந்த வகையிலையும் எதிராவே இல்லையே...."

"நான் பெரியவர்தான் இதை செய்துருக்கணும்னு சொல்லலை.

மொத்தத்துல நாகசாமி எந்த சதியும் செய்யலை. செய்திருக்க முடியாதுன்னுதான் சொல்ல வரேன்.

அவரே கொலைதான் செய்யப்பட்டிருக்கார். இதுதான் என் தீர்மானம்!"

"அதுக்கு ஆதாரம்..."

"அவர் மனைவிக்கு பணம் கொடுத்துருக்காங்க. வீடும் வாங்கித்தரப் போறதா சொல்லியிருக்காங்க."



"ரொம்ப சௌகர்யமா போச்சு. இப்பவே என்கூட கிளம்பு. நீ சொல்றது உண்மையா இருந்தா அந்தம்மாவே எல்லாம் உண்மைகளையும் போட்டு உடைச்சிடுவாங்க..."

"எப்படி சார்... உங்களைப் பார்த்தாலே ஓடில்ல ஒளிவாங்க. அடிச்சு உண்மைய வரவழைப்பீங்களா?"

"எந்த விஷயத்தை எப்படி அணுகணும்னு எனக்குத் தெரியும் வேணு.போலீஸ் அகாடமில நாங்க யாரும் பஜ்ஜி போண்டா சுட்றதுக்கு பயிற்சி எடுக்கலை. கிளம்பு."

-வேணுவுக்கும் அவர் பதிலால் புதிய தெம்பு. உடனே அவருடன் புறப்பட்டான்!

கதவைத் திறந்த நாகசாமியின் மனைவி எதிரில் இன்ஸ்பெக்டர் ருத்ராவும்- வேணுவும்!

கையில் ஒரு ப்ரீஃப்கேஸ்- சில வீட்டு மனைப் பத்திரங்கள் என்று உருவமே மாறி இருவரும் அவன்முன் நின்று கொண்டிருந்தனர்.

"நீங்க...?"

"நாங்க அரிமா மாளிகைல இருந்து வரோம். உங்களுக்கு ஒரு வீட்டு மனையை கிரயம் பண்ணிக் கொடுக்கச் சொல்லி அய்யா அனுப்பினாரு..."

-பேச்சோடு பத்திரக்கட்டு ஒன்றையும் வெளியில் எடுத்தார் ருத்ரா.

அந்தப் பெண்மணி அதைப்பார்த்து சலனப்பட்டபடியே வெறித்தாள்.

"என்னம்மா... சந்தேகமா இருக்கா...? இந்தாங்க செல் போன் அய்யாகிட்ட பேசுங்க."

வேணு உடனே நம்பரைத்தட்டி நீட்டினான். அவளும் வாங்கினாள். பேசினாள்.

மறுமுனையில் பொன்னம்பலம் குரலில் பதில்.

"அம்மா... நான்தான் அனுப்பியிருக்கேன் வாங்கிக்குங்க."

"அப்ப உங்களுக்கு எல்லா விஷயமும் தெரியும்களா?"

அவளின் பதில் கேள்வி ருத்ராவையும், வேணுவையும் கூட குழப்பிற்று.

"என்ன தெரியுமான்னு கேக்கறீங்க?"

"இல்ல... என் வீட்டுக்காரர் உங்களுக்கு எதுவும் தெரியாது. கடைசிவரை தெரியவும் கூடாதுன்னு சொல்லிக்கிட்டிருந்தாரே?"

"அப்படி என்ன சொன்னாரு?"

"சாபம்லாம் பொய்யின்னு நீங்க நினைக்கணும்னுதானே பிளம்பர் சீனு, ஞானவேல், அந்தோணின்னு மூணு பேரையும் எங்க வீட்டுக்காரர் ஆள்வெச்சு கொலை செய்தாரு!"

"அப்படியா?"

"என்ன அப்படியான்னு கேக்கறீங்க... எனக்கு சந்தேகமா இருக்கு உண்மையைச் சொல்லுங்க. நீங்க யாருங்க... பெரிய அய்யாதானா?" செல்போனை உதறிய அவளிடம் வெகுவேகமாக சுதாரிப்பு. ருத்ராவும் வேகமானார். தன் ஐடெண்டி கார்டை ஒரு கையிலும் மறுகையில் துப்பாக்கி யையும் நீட்டியவராக அவளைப் பார்க்க-

அவளுக்கு மயக்கம் வரப் பார்த்தது.

"என்ன நடந்ததுன்னு மறைக்காம சொல்லுங்கம்மா. இல்லன்னா நீங்க தப்பவே முடியாது. நீங்க பேசினதுல இருந்து பெரியவர் பொன்னம்பலம் எந்த தப்பும் பண்ணலேன்னு தெரியுது. இப்ப அவர் குரல்ல பேசினது எங்க டிபார்ட்மெண்ட் ஆளுங்க. இருந்தாலும் நடுவுல கரெக்டா கண்டு பிடிச்சுட்டீங்க. பரவால்ல...



ஆமா உங்க வீட்டுக்காரர் ஆள்வெச்சு வரிசையா கொலை செய்தார்னு சொன்னீங்களே. எதுக்காக செய்தார்னு கொஞ்சம் விளக்கமா சொல்ல முடியுமா?"

ருத்ரா துப்பாக்கி முனையால் தாடையை சற்றே சொறிந்தவராக தன் விசாரணையைத் தொடங்கவும் அவள் மிரட்சியின் உச்சத்துக்கே போய்விட்டாள்.

"உங்களுக்கு... உங்களுக்கு எப்படி என்கிட்ட வந்து விசாரிக்கணும்னு தோணினிச்சு? நான்தான் என் கணவர்தான் குற்றவாளின்னு ஒத்துக்கிட்டு ஸ்டேட்மெண்ட் கொடுத்துருக்கேனே."

"அது சம்பிரதாய ஸ்டேட்மெண்ட். ஆனா அதுக்காக பல லட்சம் வாங்கியிருக்கீங்களே, அப்ப அதுக்கு பின்னால என்னவோ இருக்குதுல்ல."

"அது... அது... என் வீட்டுக்காரர் செஞ்ச தப்புக்கு எனக்கு கிடைச்ச காம்பன்ஷேசன்."

"அதைத்தான் யார் கொடுத்தா, எதுக்கு கொடுத்தான்னு கேக்கறேன்..."

"ஒரு நிமிஷம்..." அந்தப் பெண்மணி சேலைத் தலைப் பால் முகம் ஒத்தியபடி அங்கிருந்து நகர முயன்றாள்.

"கேள்விகளுக்கு பதில் சொல்லிவிட்டு ஓட முயற்சிக்கலாமே..."

ருத்ராவிடம் இளக்காரம் தொனித்தது. வேணுவும் நம்பிக் கையோடு சிரித்தான்.

"அது... அது..."

"தப்பிக்கல்லாம் முடியாது... வேண்டாம். உண்மை பேசுங்க. அதுதான் உங்களுக்கு நல்லது."

"படு பாவி... பணத்தால என்னை கட்டிப் போட்டு இப்ப உங்க முன்னாடி என்ன மாட்டவும் விட்டு விட்டானே..."

"அந்தப் படுபாவிதான் யார்னு கேக்கறேன்!"

அவளும் வேறு வழியின்றி வாயைத் திறந்தாள். எல்லாவற்றையும் சொன்னதோடு தனக்கு தரப்பட்ட பணத்தையும் ஒரு ப்ரீஃப்கேசுடன் முன்னால் கொண்டு வந்து வைத்தாள்.

ருத்ரா திறந்து பார்த்தார்.

பத்து லட்சம் புதிய ஐநூறு ரூபாய்தாள் கட்டுக் கட்டாய் கண்ணைப் பறித்தது.

வேணுவோ நொறுங்கிப் போயிருந்தான்!

**பொ**ன்னம்பலத்துக்கு நிஜமாலுமே நெஞ்சுவலி வந்து விட்டது. அப்படியே சுருண்டு விழுந்து விட்டார்.

தூக்கிக் கொண்டு டாக்டர்களிடம் ஓடினார்கள்.

நல்லவேளை...

டாக்டர்களும் ஆக்சிஜன் கொடுத்து அதை இதைச் செய்து பிழைக்க வைத்துவிட்டனர்.

ஆனால் பொன்னம்பலத்துக்கு ஏன் பிழைத்தோம் என்று இருந்தது.

எதிரில் வேணு ஒரு கடிதத்துடன் நின்று கொண்டிருந்தான். டாக்டரிடம் இந்த கடிதத்தை பொன்னம்பலத்திடம் தரலாமா என்று கேட்டதற்கு 'தாராளமாக' என்று சொல்லியிருந்தார்கள்.

அவனும் நீட்டினான்.

"என்ன இது?"

"லெட்டருங்க..."

"யார் எழுதுனது...?"

"படியுங்க தெரியும்..."

அவரும் வாங்கி நெஞ்சைத் தேய்த்தபடி பிரித்தார்.



அன்புள்ள அப்பாவிற்கு!

என்னை மன்னித்து விடுங்கள். ஆறு அக்காக்களின் அவலமான நிலை, என்னையும் அடக்கி அடக்கி நீங்கள் வளர்த்த முறை, அதற்குக் காரணமான அந்த குடும்பச் சாபத்தின் மேல் எனக்கு வந்த கோபத்திற்கு ஒரு அளவே இல்லை.

அத்தைகள் தாலி அறுத்தார்கள் என்பதற்காக என் அக்காளும் அறுப்பார்கள் என்று நீங்கள் நம்பியதை மாற்றவும் என்னால் முடியவில்லை.

கோடி கோடியாய் சொத்து இருந்து என்ன பிரயோஜனம்? தங்கக் கூண்டுக் கிளிகளாக நானும் அக்காக்களும் இருப்பதை மாற்ற வேண்டும் என்று எனக்குள் ஒரு வெறியே வளர்ந்தது.

சாபம் சாபம் என்று எல்லோரும் சொல்லும் விஷயம் ஒரு மனிதச் செயல் என்று எல்லோரும் கருதினால்தான் என் அக்காக்களுக்கும் ஒரு விடிவு வரும் என்று தோன்றியது.

அதற்காக திட்டம் போட்டு நாகசாமியையும் பயன்படுத்தினேன்.

இங்கே எந்த சாபமும் இல்லை... என் அத்தை கணவர்கள் சாவு கூட மனித சதிகள்தான் என்று நானும் நாகசாமியுமே ஞானவேல் காதில் விழுகிற மாதிரி பேசி என் திட்டத்தைத் தொடங்கினேன். நான் எதிர்பார்த்தது போலவே ஞானவேலும் அதை உங்களிடம் சொல்ல முயன்றான். நடுவில் பிளம்பர் சீனுவிடம் சொல்லிவிட முதலில் அவனையும் பிறகு ஞானவேலையும் கொலை செய்தோம். செய்த கொலையும் வெளியே தெரிய வேண்டும் என்று நாகசாமி அந்தோணியிடம் நடித்ததில் நினைத்தபடியே எல்லாம் நடந்தது. அந்தோணியையும் தீர்த்துக்கட்டி உச்ச

பட்சமாக எனக்கு உதவிய நாகசாமி யையும் கொலை செய்து தூக்கில் தொங்கவிட்டேன்.

இவர்களே இவ்வளவு நாள் இங்கே சாபம் என்கிற பெயரில் பாவம் செய்தவர்கள் என்று நம்பும் ஒரு சூழல் உருவாகி அந்த சாப நம்பிக்கையும் உங்களிடம் அடிபட்டுப் போனது.

நான் எதிர்பார்த்த ஒரு விடுதலை கிடைத்தது.

ஆனால் எங்கே யார் செய்த தவறோ என்னைக் காட்டிக் கொடுத்து விட்டது.

சத்தியமாக நமது மாளிகைக்கு ஒரு விமோசனம் கிடைக்கத்தான் நான் இப்படி நடந்து கொண்டேன். இதில் நாகசாமியையே நான் கொல்ல வேண்டி வரும் என்று அவரோ அவர் மனைவியோ கூட எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். அவர்கள் வாயை அடைக்க பணம் கொடுத்தும் பலனில்லை. அந்த பணமே இன்று எனக்கான பெரிய சாட்சியாகி விட்டது. போகட்டும். நான் போலீசில் எதையும் மறைக்கப் போவதில்லை. உங்களுக்கு ஒரே ஒரு வேண்டுகோள்.

சாப நம்பிக்கையில் என் அக்காக்களை தொடர்ந்து கன்னிச் சிறையில் வைக்காமல் நம்பிக்கையுடன் இப்பொழுது பார்த்திருக்கும் மாப்பிள்ளைகளுக்கு திருமணம் செய்து கொடுத்து விடுங்கள்.

என்னோடு நமது குடும்ப சாபம் முடிந்து போய் விட்டது என்று நினைத்துக் கொள்ளுங்கள்.

-அன்புடன்
மார்த்தாண்டன்.

கடிதத்தைப் படித்த பொன்னம்பலம் கதற ஆரம்பித்தார்.



"மார்த்தாண்டா நீ தப்பு பண்ணிட்டேடா, இல்லை இல்லை... உன்னை நான்தான் தப்பு பண்ண வெச்சுட்டேன். என் காதலுக்கு எதிரா சதி செஞ்சு என் அக்கா புருஷங்க என்னையும் கொன்னுட்டு சொத்தை அபகரிக்க நினைச்சாங்க. என் மாமனார் தூக்குல தொங்க காரணமாவும் ஆனாங்க. அப்படிப்பட்ட அவங்களை நிஜமா கொன்னது நான் தான்!

ஆனா தப்பிக்கறதுக்காக சாபம்னு ஒரு புரளியை கிளப்பி விட்டு அதை நான் நம்பறதா காட்டத்தான் இவ்வளவு நாள் உங்களை எல்லாமும் ஒடுக்கியே வளர்த்தேன்.

இது தெரியாம நீ இப்படி ஒரு தப்பு பண்ணிட்டியே. நான் அன்னிக்கு விட்ட அம்பு இப்படியா இன்னிக்கு திரும்பி வந்து என்னைத் தாக்கணும்?"

அவரது புலம்பல் வேணுவையே ஒரு க்ஷணம் உலுக்கி விட்டது.

அவன் ஸ்தம்பித்து விட்டிருந்தான்!

-முற்றும்-